திருச்சிராப்பள்ளி மாவட்ட ஓலை ஆவணங்கள்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஓலை ஆவணங்கள்

PALM-LEAF RECORDS OF THE TIRUCHIRAPALLI DISTRICT

பதிப்பாசிரியர்

எ. சுப்பராயலு
கல்வெட்டியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005.

ISBN: 81-7090-174-X

இந்நூல் தேசிய ஆவணக் காப்பகத்தின் நிதிஉதவி கொண்டு வெளியிடப்படுகிறது.

This work is published with financial assistance from the National Archives, New Delhi.

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 138

திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி - ஜூன் 1991

நூல்	:	**திருச்சிராப்பள்ளி மாவட்ட ஓலை ஆவணங்கள்**
பதிப்பாசிரியர்	:	எ. சுப்பராயலு
விலை	:	உரூ. 50.00
பதிப்பு	:	முதற் பதிப்பு
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகம், தஞ்சாவூர்.

பொருளடக்கம்

பதிப்புரை	v
Editorial Note	xiii
ஆவணப் பட்டியல்	xvii
List of Records	xxi
ஆவணங்கள்	1
The Records (translation)	65
பிற்சேர்க்கை	
1. குறியீடுகள்	111
2. துறை ஆவணக் காப்பக எண் (Dept. Archives Accession No.)	112

பதிப்புரை

திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி வட்டத்தைச் சேர்ந்த நெரிஞ்சிலக்குடி என்ற ஊரில் ராமாராவ் என்பவரிடமிருந்து பெறப்பட்ட ஓலை ஆவணங்கள் இந்நூலில் வெளியிடப்படுகின்றன. 1979_80இல் இப்பகுதியில் தோக்கியோ வெளிநாட்டியல் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியவ்வை இணைந்து மேற்கொண்ட 'நாட்டுப்புறத்தில் சமுதாய, பண்பாட்டு மாற்றங்கள்' என்ற திட்டத்தின் தொடர்பாக கள ஆய்வு மேற்கொண்ட பொழுது தோக்கியோ வெளிநாட்டியல் பல்கலைக்கழகத்தின் 'ஆசிய, ஆப்பிரிக்க மொழிகளும் பண்பாடுகளும் ஆய்வு நிறுவனத்தைச்' சேர்ந்த பேராசிரியர் நயித்தோ *(M. Naito)* இவ்வோலை ஆவணங்களைப் பெற்றார். 1984 இல் அவர் இவற்றைத் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் துறைக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். இப்போது தேசிய ஆவணக் காப்பகத்தின் நிதி உதவியோடு இவை வெளியிடப்படுகின்றன. கிடைக்கப்பெற்ற மொத்தம் 72 ஆவணங்களில் மிகச் சிதைந்து போன எட்டு ஆவணங்களை நீக்கி மற்ற 64 ஆவணங்கள் இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

பனை ஓலைகளில் உள்ள இவ்வாவணங்கள் இடைக்காலக் கல்வெட்டுகளோடு நடையிலும் செய்தியிலும் பெரிதும் தொடர்புடையனவாகக் காணப்படுவதால் இவற்றைக் கல்வெட்டியல் துறை பதிப்புக்கு எடுத்துக்கொண்டது. இவை 19 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டுச் சமுதாய, பொருளாதாரக் கூறுகளைப் புரிந்து கொள்வதற்கு துணைபுரியக் கூடியவை. 18, 19_ஆம் நூற்றாண்டுகளின் வரலாற்றாய்வுக்கு ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அரசு ஆவணங்களே பெரும்பாலும் இதுவரை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆயினும் தமிழ் முதலிய இந்நாட்டு மொழிகளில் எழுதப்பட்ட பிற ஆவணங்கள் தரும் செய்திகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டால்தான் முழுமையான வரலாறு கிடைக்கும் என்ற கருத்து அண்மைக் காலத்தில் மேலோங்கி வருகிறது. இத்தகைய ஆவணங்கள் ஏராளமாக நாட்டுப்புறங்களிலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் சுவடி நூலகங்களிலும் தூங்கிக் கிடக்கின்றன. ஏடுகளில் பல்வேறு கையெழுத்துகளில் உள்ள இவற்றை ஒலிபெயர்ப்பு செய்வதில் உள்ள இடர்ப்பாட்டினால் வரலாற்று ஆய்வாளர்கள் இன்னும் இவ்வாவணங்கள் மீது ஏனோ தானோ என்று தான் தம் பார்வையைச் செலுத்தி வருகின்றனர். இவ்வாவணங்களில் உள்ள வரலாற்றுக் கருவூலத்தைக் கோடிட்டுக்காட்டி மேல் வரும் வரலாற்று ஆய்வாளருக்கு ஊக்கம் அளிக்கும் கருத்தோடு இவ்வாவணப்பதிப்பு வெளியிடப்படுகிறது.

இவ் வோலை ஆவணங்கள் பெரும்பாலும் படிப்பதற்குக் கடினமான வீச்செழுத்தில் எழுதப்பட்டுள்ளன. சுருக்கெழுத்துகளும் குறியீடுகளும் ஆங்காங்குக் கையாளப்பட்டுள்ளன. பல இடங்களில் இவற்றை ஊகித்துத் தான் விளங்கிக் கொள்ள இயலும். இவ்வோலைகளைப் படித்துப் புரிந்து கொள்வதில் உள்ள இடர்ப்பாடு வரலாற்றாய்வாளர்கள் இவற்றை ஆர்வத்தோடு அணுகாததற்கு ஒரு காரணமாகவும் சொல்லலாம். எனினும் செய்திகள் கொஞ்சம் பழகிப்போனால் படிப்பதில் உள்ள மலைப்பு படிப்படியாகக் குறைந்துவிடும்.

இவ்வாவணங்கள் பல நூற்றாண்டுகளாக இதற்கென்றே வளர்ந்து வந்த ஆவணமொழிநடையில் எழுதப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இடைக்காலக் கல்வெட்டுகளோடு இவை பெரிதும் ஒத்துள்ளன. இருப்பினும் மொழியைப் பொறுத்தவரையில் இலக்கணப்பிழைகள் மலிந்துள்ளனவாகச் சொல்லலாம். சில ஆவணங்கள் பேச்சு வழக்கை மிகவும் எதிரொலிக்கின்றன. ஓரிரண்டு ஆங்கிலச் சொற்களும் பல பாரசீக, அரபுச் சொற்களும் ஆங்காங்குக் கையாளப்பட்டுள்ளன. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் இருந்த கல்வி நிலையையும் எழுத்தறிவையும் அளந்தறிய இவ்வாவணங்கள் ஓரளவு உதவும். இவ்வாவணங்களில் ஒப்பமிட்டோர் பலர் 'கீறல்' ஒப்பங்களே இட்டுள்ளனர். அதாவது நாட்டில் பெரும்பாலோர் எழுதப்படிக்கத் தெரியாத தற்குறிகளாக இருந்தனர் என்று கருதவேண்டியுள்ளது. எப்படியிருப்பினும் இவ்வாவணங்கள் அவற்றின் பொருள் வளத்துக்காக மட்டுமே வெளியிடப்படுகின்றன என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

இத்தொகுப்பில் ஆவணங்கள் ஆண்டு வரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாவணங்களைப் பொருள் பற்றிக் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தலாம்.

ஆவண வகை	ஆவண எண்கள்
மனை சுத்தக்கிரய சாசனம்	1, 2, 4, 18, 63
நிலம்/பங்கு சுத்தக்கிரய சாசனம்	30, 34, 55, 59
நிலப் பிரியல் சீட்டு	3
நிலம்/பங்கு ஈட்டுப்பேரில் கடன் முறி/பத்திரம்	5, 6, 10, 14, 17, 19, 23, 24, 27, 28, 29, 60, 61, 62
நிலப் போக்கிய முறி/சீட்டு (அனுபோக ஒத்தி போக்கியக் கடன் முறி)	8, 13, 16, 22, 33, 45, 53, 54, 56, 57
கடன் முறி	42

உடன்படிக்கைச் சீட்டு	7
ஒத்தி உடன்படிக்கைச் சீட்டு	11, 15
ஒத்தி உடன்படிக்கைச் சீட்டுக்கு எதிர் நடைச்சீட்டு	12
சாமிபோகச் சீட்டுக்கு எதிரிடைச்சீட்டு	9
கறார் நமா சீட்டு	20
ஈட்டு நில எல்லை	21
இசாறாப் பட்டயம்	26, 43, 44, 58
இசாறா முச்சலிக்கா	32
இசாறா ரசீது	25
வாயிதாப் பணம் செலுத்தல் விவரம்	35
பேரிசு விவரம்	36
குத்தகைச் (அடையோலை) சீட்டுக்கு எதிர் நடைச்சீட்டு	37, 38, 39, 40, 41, 46, 47, 48, 49
நிலப் பரிவர்த்தனைச் சாசனம்	50
பள்ளுப் பிரியல் சீட்டு	31
அடிமைச் சீட்டு	51
ரசீது	52
கோசம் பதியல்	64

மேலே உள்ள பட்டியலை ஊன்றிப் பார்த்தால் ஆவணங்கள் சீட்டு, முறி, சாசனம், பத்திரம் என்று பல சொற்களால் குறிக்கப்பட்டன என அறியலாம். இவை யாவும் ஒரு பொருட் பல சொற்களென்பதில் ஐய்யமில்லை.

பெரும்பாலான ஆவணங்கள் ஒருவர் தம் நிலத்தை வேறொருவரிடம் ஈடு வைத்து அவரிடம் கடன் வாங்கியதைப் பற்றியவை. இவற்றிலும் இரு வகைகள் உள்ளன. முதல் வகை 'ஈட்டுப் பேரில் கடன் முறி' என்பது. இதில் ஈடுவைத்தவர்

கடன் முதலையும் வட்டியையும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் திருப்பித்தரவேண்டும். அப்பொழுது ஈடுவைத்த நிலத்தின் முழு உரிமையைத் திரும்பப் பெறுவார். ஆனால் அதுவரை அவர் நிலத்தை அவரே பயிரிட்டு அனுபவித்து வரலாம். இதோடு தொடர்புடைய இன்னொரு வகை 'ஒத்திப்போக்கிய கடன் முறி' அல்லது சுருக்கமாக 'போக்கிய முறி' என்பது. இதுவே சில சமயம் 'ஒத்தி உடன்படிக்கைச் சீட்டு' என்றும் வழங்கப்படும். இவ்வகையில் கடன்முதல் மீது வட்டி செலுத்தப்படுவதில்லை. வட்டிக்கு மாறாகக் கடன் கொடுத்தவர் நிலத்தை உழுது பயிர்செய்து அதன் விளைவை அனுபவிக்கலாம். அந்நிலத்தின் மீதான வரியையும் அவர் அரசாங்கத்துக்குச் செலுத்திவரவேண்டும். கடன்தொகை குறிப்பிட்ட காலக்கெடுவில் திருப்பித்தரப்பட்டால் நிலத்தை அதன் உடைமையாளர் திரும்பப் பெறுவார்.

முதல் வகையில் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கடன்தொகையைச் செலுத்தவில்லையென்றால் நிலத்தை அனுபவிக்கும் உரிமையைக் கடன்கொடுத்தவர் பெறுவார். அதாவது முதல் வகையான ஈட்டுப்பேரில் கடன் முறி இரண்டாவதான போக்கிய முறியாகக் கருதப்படும். விளைநிலத்தைக் குத்தகைக்கு அடைத்தல் தொடர்பான ஆவணங்கள் ஒன்பது இத்தொகுப்பில் உள்ளன. இவைகள் யாவும் குத்தகைதாரர் நிலக்கிழாருக்கு எழுதிக்கொடுத்த 'எதிர்நடைச்சீட்டு' என்ற ஒப்பந்தங்களாகும். ஓர் ஆவணம் இதனையே இசாறா முச்சலிக்கா என்று குறிக்கிறது. அதாவது குத்தகைதாரர் தாம் குத்தகைக்கு எடுத்துக்கொண்ட நிலத்தை எந்த முறையில் பயிரிடுவது, நிலக்கிழாருக்கு எவ்வளவு தானியம் அல்லது எவ்வளவு தொகை எந்தெந்தக் கால எல்லைக்குள் செலுத்துவது, எவ்வளவு காலத்துக்குப் பின் நிலத்தைத் திருப்பிக் கொடுப்பது போன்ற நிபந்தனைகளைக் குறிப்பிட்டு அந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுவோம் என்ற இசைவைத் தெரிவிக்கும் ஒப்பந்தச் சீட்டுகளாகும். நிலத்தின் பேரில் ஊரில் பொது ஊழியர்களுக்குக் கொடுக்கவேண்டிய (கொல்லன், தச்சன் சுதந்திரம் முதலிய) சுதந்திரங்கள் (வழக்கமான ஊதியங்கள்) குத்தகைதாரரே கொடுத்துவரவேண்டும் என்று எல்லா ஆவணங்களும் குறிப்பிடுகின்றன. விளைந்த வைக்கோலில் ஒரு பகுதியை நிலக்கிழாருக்குக் கொடுக்கவேண்டும் என்ற கட்டாயமும் இருந்தது. சில ஒப்பந்தங்களில் அரசு வரியையும் (வரிவாயிதா) குத்தகைதாரரே செலுத்தவேண்டும் என்று விதிக்கப்பட்டது. (40, 41).

இந்தக் குத்தகை ஆவணங்களில் ஒரு குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால், குத்தகைக்கு அடைத்த நிலக்கிழார் மராட்டிப் பிராமணர் ('ராயர்') ஆக இருக்க, குத்தகை கொண்டவர் ஏழு பேர் பள்ளராகவும், இருவர் கவுண்டர், ஒருவர் முத்திரியராகவும் உள்ளனர். இவர்களுள் பள்ளர், சமுதாயத்தில் மிகப் பின்னிலையில் இருந்தவர்கள். இவர்கள் நிலக்கிழாருக்குக் கீழ் அடிமைகளாக இருந்தார்கள். இவர்கள் குடியிருந்த மனையும் நிலக்கிழாருக்குச் சொந்தமே. ஆகவே இவர்கள் ஒருவகைக் கட்டாயத்தின் பேரிலே குத்தகைதாரராக இருக்கவேண்டிய சூழ்நிலையிருந்தது எனலாம். பணை பள்ளர் (அல்லது பண்ணை பள்ளர்) என இவர்கள் அழைக்கப்பட்டார்கள்.

நிலவிலை ஆவணங்கள் நான்கும் மனைவிலை ஆவணங்கள் ஐந்தும்

இத்தொகுதியில் உள்ளன. விற்பவர் வாங்குபவரிடம் முன்பெற்ற கடனை அடைப்பதற்கோ அல்லது வேறு அவசரப் பயன்பாட்டுக்கோ நிலம்/மனை விற்பனை நடந்துள்ளது. இப்படி விற்கப்பட்ட நிலம் அல்லது மனை பெரும்பாலும் அவ்வூரில் கெணசங்காபாகப் பங்குகளில் ஒன்றைச் சேர்ந்ததாகச் சுட்டப்படுகிறது. கெண (அல்லது கண) சங்கா பாகம் என்பது ஓருரில் உள்ள நிலங்களை (வீட்டுமனைகள் உட்பட) அவ்வூரைச் சேர்ந்த சில குறிப்பிட்ட குடும்பங்கள் கூட்டாக அனுபவிக்கும் முறை ஆகும். இம்முறை பிராமண ஊர்களிலேயே வழக்கத்தில் இருந்ததாகத் தெரிகிறது. ஊர்நிலங்கள் ஒரு குறிப்பிட்ட எண் உள்ள பங்குகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு பங்கிலும் நன்செய், புன்செய், மனை போன்ற பலதரப்பட்ட வகைகளும் அடங்கும். துவக்கத்தில் ஒவ்வொரு நிலக்கிழாருக்கும் இத்தனை பங்குகள் என்று இருந்தன. சோழர் காலப் பிராமண ஊர்களில் (பிரமதேயங்களில்) ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு வேலி கொண்ட பங்கு ஒன்று கொடுக்கப்பட்டது. ஆனால் இவ் வோலை ஆவணங்களில் ஒருவரே பல பங்குகளுக்குரியவராகப் பார்க்கிறோம் (34). காலப்போக்கில் நிலவுடைமையில் ஏற்பட்ட மாற்றங்களே இதற்குக் காரணமாகும். 13 ஆம் நூற்றாண்டு தொடங்கி **சமுதாயத்தில்** ஒரு சிலர் பலவழிகளில் பெருநிலக்கிழார்களாக, நிலப்பிரபுக்களாக உருவானார்கள் என்பதற்கு இவை சான்று பகர்கின்றன.

மேற்குறிப்பிட்ட ஒத்திப் போக்கியச் சீட்டுகளையும் விலை ஆவணங்களையும் ‘ஆவணப்பதிவு’ அடிப்படையில் இருவகையாகப் பிரிக்கலாம். ஒரு வகை அரசு ஆவணப் பதிவகத்தில் பதியப்படாமல் தனிப்பட்ட இருவர் மட்டும் செய்துகொண்ட உடன்படிக்கைகள். இரண்டாவது ஆவணப் பதிவகத்தில் பதியப்பட்ட உடன்படிக்கைகள். பின்னவை அரசுக் கருவூல முத்திரை கொண்ட ஓலைகளில் எழுதப்பட்டுள்ளன. முன்பக்கத்தில் இடது கோடியில் வருவாய்த்துறை அஞ்சல்தலை **(revenue stamp)** முத்திரையாகப் பதிக்கப்பட்டுள்ளது. இஃது அந்த ஓலையின் மதிப்பு இவ்வளவு (காலணா, எட்டணா, ஒரு ரூபாய்) என்று தமிழ், தெலுங்கு, பாரசீகம், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளில் குறிப்பிடுகிறது. பின்பக்கத்தில் வலது கோடியில் கருவூல (பொக்கிஷம்) முத்திரை நான்கு மொழிகளில் பதிக்கப்பட்டுள்ளது. இந்த அரசு முத்திரை ஓலைகளில் ஆண்டில் பழையது 1832 ஐச் சேர்ந்தது. அதாவது 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே அரசு ஓலைகள் புழக்கத்துக்கு வந்துவிட்டன எனலாம். இருப்பினும் பல உடன்படிக்கைகள் ஆவணப்பதிவு அலுவலகங்களில் பதியப்படாமலும் நடைமுறையிலிருந்தன. மொத்தத்தில் முப்பது விழுக்காடே பதியப்பட்டன. நிலவிலை ஆவணங்களைப் பொறுத்தவரையில் யாவும் பதியப்பட்டன எனத் தெரிகிறது. ஓர் ஆவணம் (64) ஆவணங்களைப் பதிவதில் (கோசம் பதியல்) உள்ள நடைமுறையைத் தெரிவிக்கிறது.

நான்கு ஓலைகள் கும்பினி அரசின் சார்பில் திருச்சிராப்பள்ளி சுபாவின் தண்டல் அதிகாரி **(Collector)** நிலக்கிழாருக்குக் (மிராசுகுடி) கொடுத்த ‘இசாறா’ பட்டயங்களாகும்.* அதாவது இவை குறிப்பிட்ட நிலக்கிழாரின் அனுபோகத்தில் உள்ள நிலத்தின் அளவு, தரம், விளைச்சல் முதலியவற்றுக்கேற்றவாறு எவ்வளவு நிலவரி (பாரசீகத்தில் பேரிசு), ஆண்டில் எந்தெந்தத் தவணைகளில், எந்த

* இவை ‘பட்டா’ எனப்படுவது.

நிபந்தனைகளுக்குட்பட்டு அரசுக்குச் செலுத்தவேண்டும் என்ற குறிப்புக்களடங்கிய ஆவணங்கள். இவற்றில் தொனிக்கும் அதிகாரமிரட்டல் போன நூற்றாண்டின் முற்பகுதியிலேயே ஆங்கில அரசு இப்பகுதியில் எவ்வளவு உறுதியாக அமர்ந்துவிட்டது என்பதற்குச் சான்று பகர்கிறது.

இவ்வோலைஆவணங்கள யாவும் ஒரு மராட்டிப் பிராமணர் குடும்பத்தைச் சேர்ந்தவையாதலால் பெரும்பாலும் அப்பிராமணக் குடும்பத்துடன் தொடர்புடைய செய்திகளே அதிகமாக உள்ளன. இவற்றைக் கொண்டு அன்றையச் சமுதாயத்தை முழுமையாக விளக்கமுடியாது. இருப்பினும் ஓரிரண்டு கூறுகள் தெளிவாகத் தெரிகின்றன. ஒன்று, சமுதாயத்தில் இருந்த வர்க்க முரண்பாடு. சில குடும்பங்கள் மிகுந்த நிலவளம் பெற்றிருக்க பல நிலமற்றவையாக இருந்தன. பெருநிலக்கிழார்கள் சுகபோகங்களில் திளைத்து, உழைக்காமல் செலவு செய்து வந்ததன் காரணமாக எப்பொழுதும் கடனாளிகளாக இருந்தார்கள். தங்கள் நிலங்களைஅடகு வைத்தும், விற்றும் கடன் வாங்கிச் செலவு செய்தார்கள் என்பது வெளிப்படை. சமுதாயத்தில் இன்னொரு கோடியில் இருந்தவர்கள் இவர்களை அண்டி அடிமை வாழ்க்கையே கதியென்று இருந்தார்கள். அன்றைய நிலவுடைமைச் சமுதாயத்தின் தலையாய உற்பத்திச் சாதனங்களாக இவர்கள் இருந்தும் கூட தாங்கள் கடன் வாங்கவேண்டுமானால் தங்களையே அடகுவைத்தும் விற்றுமே கடன் வாங்க முடியும். மகன் திருமணத்துக்கென்று கடன் வாங்கிய தந்தை மகனையும் மருமகளையும் வாழையடி வாழையாக நிலமுதலாளிக்கு அடிமையாக அர்ப்பணிப்பதை ஓர் ஆவணம் (51) ஒளிவு மறைவின்றித் தெரிவிக்கிறது. நிலக்கிழார்கள் இம் 'மனிதச் சொத்துகளையும்' நிலங்களை விற்பதைப் போல தங்கள் வாழ்க்கை வளத்துக்காக விற்கத் தயங்கவில்லை (31).

இவ்வாவணங்கள் வேறு சில சமுதாயச் செய்திகளையும் தருகின்றன. ஊர்களில் நிலக்கிழார்களை அண்டி கொல்லர், தச்சர் போன்ற பிற 'தொழிலாளிகளும்' இருந்தார்கள். ஆனால் இவர்கள் உண்மை நிலைபற்றி தெளிவான செய்திகள் இல்லை.

நாட்டுக் கர்ணன், கிராமக் கர்ணன் என்ற 'அரசு' அலுவலர்கள் தமிழ்நாட்டில் சோழர் காலத்திலிருந்து இருந்துவந்திருக்கிறார்கள். தொடக்கத்தில் கும்பினி ஆட்சி இவர்களைத் தங்களுடைய கீழ்நிலை அலுவலர்களாக ஏற்று மதித்துவந்ததாகத் தெரிகிறது. ஊராட்சி முறையில் முன்பு வழக்கிலிருந்தவற்றில் தங்களுக்குச் சாதகமானதை இவ்வரசு அப்படியே எடுத்துக்கொண்டது. அதேபோல் முகலாய ஆட்சிக் காலத்திலிருந்து வழங்கிவந்த சுபா, மாகாணம் போன்ற ஆட்சிப்பிரிவுகளையும் தொடர்ந்து பயன்படுத்தியது எனலாம்.

இவ்வாறு இவ்வோலைகள் 19ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்து வந்த அரசியல், சமுதாய மாற்றங்களை ஓரளவு கோடி காட்டுகின்றன. மேலும் இவைபோன்ற ஆவணங்களைத் தொகுத்துப் பயன்படுத்தினால் அரசு ஆவணங்கள் இதுவரை வரலாற்றுக்குத் தராத பல புதிய செய்திகளைப் பெறலாம் என்பது உறுதி.

நன்றிக் கடப்பாடு:

இந்நூல் வெளியிட நல்கை அளித்துதவிய இந்திய தேசிய ஆவணக் காப்பகத்துக்கும், இந்நூல் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடாக அனுமதித்த தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், ஆட்சிக்குழுவினர் ஆகியோருக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ் ஆவணங்களை ஓலைகளிலிருந்து பெயர்த்தெழுதியபின் பாடங்களை ஒருமுறை ஒப்புநோக்கி உதவிய எம் துறையின் ஆய்வாளர் செல்வி எம். நளினிக்கு மான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இந்நூல் சீரார்கவும் அழகாகவும் அச்சியற்றி உதவிய தமிழ்ப் பல்கலைக்கழக பதிப்புத்துறை உதவி இயக்குநருக்கும் பிற தொழில்நுட்ப உதவியாளர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர்,
21-6-91.

எ. சுப்பராயலு.

EDITORIAL NOTE

The palm-leaf records included in this volume were obtained from one Mr. Ramarao of the village Nerinjalakudi in Tiruchirapalli District by Prof. M. Naito of the Institute for the Study of Languages and Cultures of Asia and Africa, Tokyo University of Foreign Studies, during the course of his field work in connection with a project to study socio-cultural changes in villages in this area, undertaken by his Institute in collaboration with Madurai Kamaraj University and Madras University during 1979-81. They were later presented to the Department of Epigraphy, Tamil University. A generous grant from the National Archives, New Delhi has enabled the present publication.

The primary reason for taking up the publication of these records by the Epigraphy Department is that they resemble very closely medieval inscriptions in style, format and contents and so they indirectly help in a better understanding of the inscriptions. Secondly, they are very useful to understand the social and economic aspects of the 19th century. Until now very little attention has been paid to these indigenous records[1] as against the Government records written in English. There is however a growing awarenes of the importance of these records among south Indian historians even though they are diffident to approach them in view of the difficulties encountered in transcribing the same. The present publication may create interest among scholars to transcribe and use them for historical studies.

These records are mostly written in very cursive writing interspersed with abbreviations and symbols. In many contexts the reading can only be guessed. Once one becomes familiar with the contents, the reading is somewhat easier. They are written in a documentary language which has been in vogue since medieval times. The language, of course, contains many grammatical errors. Some of the records are written in colloquial style. Many Persian and Arabic terms and a few English terms are freely used. These records may also reflect the condition of literacy during the last two centuries. Most of the signatories are found to be illiterates as they sign only by a graffito mark *(kiral)*.

The records are called by various synonymous terms such as *chittu, muri, sasanam,* and *pattiram* all meaning record or document. They may be classified into certain categories according to the subject matter.

Sale of House Site	1,2,4, 18,63
Sale of Land	30, 34, 55, 59
Deed of Mortgage	5,6,10,14, 17, 19, 23, 24, 27-9, 60-2.
Usufructuary Mortgage	8,13, 16,22, 33, 45, 53, 54, 56-7.
Reciprocatory Lease Deed	37-41, 46-9.
Land Assessment Demand	26,43,44,58
Slavery Deed	51
Miscellanneous	

A bulk of the documents relates to the borrowal of money on mortgaging land. There are two kinds of mortgages: In the first kind the borrower pledges his property to get loan but he retains the cultivation right himself. He should pay interest on the capital as stipulated and when he returns the capital he retrieves the ownership of the pledged property. In case he defaulted in payment within the stipulated time the creditor can enjoy the land in usufructuary mortgage. In the second kind, which is actually the usufructuary mortgage, the borrower does not pay interest on the loan and instead he lets the creditor cultivate and enjoy his land until the stipulated time.

There are nine documents which may be called lease deeds. Actually they are the undertakings given by the lease-holder to the owner of the land enumerating the conditions under which the leased land would be cultivated, how much rent would be paid, etc. The lease-holder was under the obligation to pay, in addition to the rent, the customary perquisites called *svatantram* to village artisans and other public servants (accountant, watchman,etc.). He had to give a part of the paddy straw to the landlord and in certain rare cases there was agreement to remit the government tax also. While the landlord in all these documents happened to be a Maratha Brahman ('rayar') the lease- holders fell into three groups: seven belonged to the *pallar* group, two were *kavundar* and one *muttiriyan.* While the latter two groups enjoyed some status in the contemporary society, the first group occupied only the lowliest position, being ever slaves to the landlords. Even the house-sites they were occupying were in the possession of the landlords. That means, they were lease-holders only on some compulsion. They were called *pan(n)ai pallar* meaning the 'pallar of, or attached to, the farm.'

There are nine sale deeds, four relating to land and five to house-sites. The sales are said to be made either to clear off some previous loan or for some other 'urgent' necessity. In most of the cases the land or house-site sold is said to belong to a corporate share *(gana sanga bagam)*[2] of the owner in the particular village. That is the seller was the possessor of that share as a member of the corporate community of landholders in the village. In this kind of corporate ownership, the village lands -- wet as well as dry land, house sites, grazing grounds, etc. -- were apportioned into a number of shares and enjoyed by a fixed number of families corporately. This corporate ownership was in vogue mostly in Brahman villages and it may be a survival from the medieval times. During the Chola times a family could enjoy only one share consisting of a *veli* or about 6.6 acres. But according to the present documents an individual family could enjoy several shares, even a major part of a village. This situation reflects the changes in land rights that had been going on for a millennium. The rise of big landlords was becoming more and more prominent during the post-13th centuries.[3]

Many of the above mentioned deeds of mortgage and sale were agreements entered into between two private persons without any other legal binding. But some of them are found to be 'stamp' documents. That is, they were written on leaves impressed with revenue stamp and issued by the government treasury. The stamp impression on the front side gives the value of the stamp as 4 anna, 8 anna, 1 rupee, etc. and that on the back side refers to the treasury *(pokkisham)*. The legends on both the sides are given in four languages: Tamil, Telugu, Persian and English. Such practice of registering documents with the government seem to have come into vogue in the early half of the 19th century.

The presence of English (East India Company) Government is already seen in four documents issued to the *mirasukudi* or the landowners by the Collector, J. Bird, of the *subha* of Tiruchinapalli (same as Tiruchirapalli). Called *ijara-pattayam,* they are demands for payment of land tax. They enumerate the different grades of lands in possession of the particular landowner and the tax thereon, the concessions, if any, the number and month of instalments in which the taxes are to be paid, etc. The punishment for defaulting the payments is also clearly indicated. The tone of the language used in these documents reflects the authoritarian position already taken by the English rulers in this area.

As all the present documents belong to a single (Maratha Brahman) family they yield normally information relating to only that family and the persons who came into contact with that family. They cannot therefore be expected to give a complete picture of the society of the day. Even then some striking features cannot be missed. One is the existence of wide disparity among the social strata. The landholders, though they did not produce themselves, spent lavishly and were, therefore, always in debt and resorted to borrowing and the lease-holders who occupied the other extreme position were just slaves to the above group and had to lead a wretched life. They had no other property to sell except themselves. The landlord did not hesitate to sell even these 'human' properties for their selfish enjoyment.

This information about the role of slaves as lease- holders is very significant and has to be taken into account while studying the mode of production during the last few centuries.

Notes

1. Some interesting indigenous records have been reproduced in *Papers on Mirasi Right Selected from the Records of Government,* Madras, 1862 and in G.U. Pope, *A Handbook of the Tamil Language: A Prose Reader.* 1st ed., 1905; Reprint (Asian Educational Services, New Delhi) 1982. See also for a discussion of the records on *mirasi* right N. Karashima, *South Indian History and Society: Studies from Inscriptions,* A.D. 850-1800 (OUP, Delhi, 1984), pp.xxiff.

2. From Sanskrit *'gana sankhya bhaga'.*

3. N. Karashima, *op.cit.,* pp.165-80.

ஆவணங்கள் பட்டியல்

ஆவணம் வரிசை எண்	செய்தி	தேதி	பக்கம்
1.	மனை சுத்தக்கிரய சாசனம்	(1832 செப்டம்பர் 26)	1
2.	மனை சுத்தக்கிரய சாசனம்	(1832 அக்டோபர் 11)	2
3.	நிலப்பிரியல் சீட்டு	(1837 டிசம்பர் 29)	3
4.	மனை சுத்தக்கிரய சாசனம்	(1839 பெப்ரவரி 17)	4
5.	பங்கு ஈட்டு மேல் கடன் முறி	(1841 நவம்பர் 20)	5
6.	பங்கு ஈட்டு மேல் கடன் முறி	(1841 நவம்பர் 20)	6
7.	உடன்படிக்கைச் சீட்டு	1844 மார்ச்சு 10)	7
8.	நிலம் போக்கிய முறி	(1844 ஆகஸ்டு 26)	8
9.	சாமிபோகச் சீட்டுக்கு எதிர்நடைச்சீட்டு	(1844 ஆகஸ்டு 26)	9
10.	ஈட்டுமேல் கடன் முறி	(1845 சூலை 10)	10
11.	ஒத்தி உடன்படிக்கைச் சீட்டு	(1846 மார்ச்சு 23)	11
12.	(ஒத்தி) உடன்படிக்கைச் சீட்டுக்கு எதிர்நடைச் சீட்டு	(1846 மார்ச்சு 23)	12
13.	போக்கியச் சீட்டு	(1846 மார்ச்சு 23)	13
14.	நிலம் ஈட்டுப்பேரில் கடன் முறி	(1846 சூலை 15)	14
15.	(ஒத்தி) உடன்படிக்கை	(1847 மார்ச்சு 25)	15
16.	போக்கிய முறி	(1847 ஏப்ரல் 4)	16
17.	ஈட்டுக் கடன் முறி	(1847 நவம்பர் 11)	17
18.	மனை சுத்தக்கிரய சாசனம்	(1848 சனவரி 1)	18

19.	ஈட்டுக் கடன் பத்திரம்	(1848 ஏப்ரல் 1)	20
20.	கறார் நமா சீட்டு	(1848 நவம்பர் 19)	21
21.	ஈட்டு நிலம் எல்லை	(1850 சூலை 14)	21
22.	நிலம் போக்கியச் சீட்டு	(1850 சூலை 23)	23
23.	ஈட்டுமேல் கடன் முறி	(1850 செப்டம்பர் 11)	24
24.	நிலம் ஈட்டுக்கடன் பத்திரம்	(1850 அக்டோபர் 26)	25
25.	இசாறா ரசீது	(1851 பெப்ரவரி 27)	26
26.	இசாறா பட்டையம்	(1851 ஏப்ரல் 19)	26
27.	ஈட்டுமேல் கடன் பத்திரம்	(1851 ஆகஸ்டு 6)	28
28.	ஈட்டுமேல் கடன் பத்திரம்	(1851 ஆகஸ்டு 12)	29
29.	ஈட்டுமேல் கடன் பத்திரம்	(1851 செப்டம்பர் 24)	30
30.	நிலம் சுத்தக்கிரய சாசனம்	(1852 ஏப்ரல் 30)	31
31.	பள்ளுப்பிரியல் சீட்டு	(1852 ஏப்ரல் 30)	32
32.	இசாறா முச்சிலிக்கா	(1852 மே 21)	33
33.	நிலம் போக்கியச் சீட்டு	(1852 சூலை 11)	34
34.	நிலம் சுத்தக்கிரய சாசனம்	(1852 ஆகஸ்ட்டு 29)	35
35.	வாயிதா பணம் செலுத்தல் விபரம்	(1853 ஏப்ரல் 24)	36
36.	பேரிசு விபரம்	(1853 மே 12)	38
37.	குத்தகைச் சீட்டுக்கு எதிர்நடைச் சீட்டு	(1853 சூலை 13)	39
38.	குத்தகைச் சீட்டுக்கு எதிர்நடைச் சீட்டு	(1853 சூலை 13)	39
39.	குத்தகைச் சீட்டுக்கு எதிர்நடைச் சீட்டு	(1853 சூலை 13)	40

40.	அடையோலைச் சீட்டுக்கு எதிர்நடைச் சீட்டு	(1853 ஆகஸ்டு 16)	41
41.	அடையோலைச் சீட்டுக்கு எதிர்நடைச் சீட்டு	(1853 ஆகஸ்டு 16)	42
42.	கடன் முறி	(1853 ஆகஸ்டு 16)	42
43.	இசாறாப் பட்டயம்	(1854 ஏப்ரல் 17)	43
44.	இசாறாப் பட்டயம்	(1854 ஏப்ரல் 17)	44
45.	நிலம் போக்கிய முறி	(1854 ஏப்ரல் 17)	45
46.	குத்தகைச் சீட்டுக்கு எதிர்நடைச் சீட்டு	(1854 ஏப்ரல் 26)	46
47.	குத்தகைச் சீட்டுக்கு எதிர்நடைச் சீட்டு	(1854 ஏப்ரல் 29)	47
48.	குத்தகைச் சீட்டுக்கு எதிர்நடைச் சீட்டு	(1854 ஏப்ரல் 29)	48
49.	குத்தகைச் சீட்டுக்கு எதிர்நடைச் சீட்டு	(1854 ஏப்ரல் 29)	49
50.	நிலம் பரிவர்த்தனைச் சாசனம்	(1854 மே 20)	50
51.	அடிமைச் சீட்டு	(1854 மே 21)	51
52.	ரசீது	(1854 மே 22)	51
53.	அனுபோகஒத்தி போக்கியக் கடன் முறி	(1854 மே 27)	52
54.	அனுபோகஒத்தி போக்கியக் கடன் முறி	(1854 சூன் 1)	53
55.	பங்கு சுத்தக்கிரய சாசனம்	(1855 மே 15)	54
56.	அனுபோகஒத்தி முறி	(1856 செப்டம்பர் 13)	55
57.	அனுபோகஒத்தி முறி	(1856 செப்டம்பர் 13)	56
58.	பட்டா	(1856 செப்டம்பர்)	57
59.	நிலம் சுத்தக்கிரய சாசனம்	(1858 மே 22)	58
60.	ஈட்டுமேல் கடன் பத்திரம்	(1858 மே 22)	59

61.	ஈட்டுமேல் கடன் பத்திரம்	(1858 ஜூன் 5)	60
62.	ஈட்டுமேல் கடன் பத்திரம்	(1858 ஆகஸ்ட்டு 19)	61
63.	மனை சுத்தக்கிரய சாசனம்	(1858 செப்டம்பர் 2)	62
64.	கோசம் பதியல் - - -		63

List of Records

Record No.	Subject	Record No.	Subject
01	Sale Of House Site	20	Stipulation Deed
02	Sale Of House Site	21	Details Of Mortgaged Land
03	Land Separation Deed	22	Usufructuary Mortgage
04	Sale Of House Site	23	deed Of Mortgage
05	Deed Of Mortgage	24	Deed Of Mortgage
06	Deed Of Mortgage	25	Receipt For Rent Payment
07	Compound Wall Settlement	26	Land Assessment Demand
08	Usufructuary Mortgage	27	Deed Of Mortgage
09	Deed For Landlord's Share	28	Deed Of Mortgage
10	Deed Of Mortgage	29	Deed Of Mortgage
11	Usufructuary Mortgage	30	Sale Of Land
12	Usufructuary Mortgage	31	Sale Of Slaves
13	Usufructuary Mortgage	32	Ijara Muchalika
14	Deed Of Mortgage	33	Usfructuary Mortgage
15	usufructuary Mortgage	34	Sale Of Land
16	Usufructuary Mortgage	35	Farm Accounts
17	Deed Of Mortgage	36	Rent Payment
18	Sale Of House Site	37	Receiprocatory Lease Deed
19	Deed Of Mortgage	38	Receiprocatory Lease Deed

39 Receiprocatory Lease Deed

40 Receiprocatory Lease Deed

41 Receiprocatory Lease Deed

42 Promissory Note

43 Land Assessment Demand

44 Land Assessment Demand

45 Usufructuary Mortgage

46 Receiprocatory Lease Deed

47 Receiprocatory Lease Deed

48 Receiprocatory Lease Deed

49 Receiprocatory Lease Deed

50 Exchange Of Land

51 Deed Of Slavery

52 Receipt For Loan Payment

53 Usufructuary Mortgage

54 Usufructuary Mortgage

55 Sale Of Land Share

56 Usufructuary Mortgage

57 Usufructuary Mortgage

58 Land Assessment Demand

59 Sale Of Land

60 Deed Of Mortgage

61 Deed Of Mortgage

62 Deed Of Mortgage

63 Sale Of House Site

64 Registration Of Documents









1. மனை சுத்தக் கிரய சாசனம்

(1832 செப்டம்பர் 26)

(எட்டணா ஓலை)

ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகந சகாப்தம் 1754 கல்யப்த 4933 இதின் மேல் செல்லாநின்ற நந்தன வருஷம் புரட்டாசி மாதம் 13 தஞ்சநகரம் சீர்மை மன்னார்குடியிலிருக்கும் அசுவத்தனாறாண பவுத்திரன் றாமசுவாமிய்யன்புத்திரன் யிப்போது திருச்சினாப்பள்ளி சுபா கிஷ்ணபூபால சமுத்திரத்திக்குப் பிறதினாமமான கொண்டயம் பேட்டையில் குடியிருக்கு மறாமத்து கோபாலய்யர் உள்ளிட்டாருக்கு மேல்படியூரிலே யிருக்கும் சேஷய்யன் பவுத்திரன் தேவரய்யன் புத்திரன் சுப்பய்யன் உள்ளிட்டார் மனை சுத்தக்கிரைய சாசனம் பண்ணிக் குடுத்தபடி யென்னமென்றால் இவ்வகரம் கெணசங்கா பாக மனை 58ல் தென்சிறகில் யெங்கள் சொந்தமான நங்கைபுரம் அய்யாவய்யங்கார் மனைக்கு கிளக்கு மிஷ்ட்டானம் சுப்பயன் மனைக்கு மேற்க்கு அக்கிறாம தெரு வீதிக்கு தெற்க்கு காவல்க்காறன் குடி இருப்புக்கு வடக்கு கொல்லை வாய்க்கால் தென்பிறம் தலைமாடுஉள்பட இன்னாங் கெல்கைக்கி உள்பட்ட கீள் மேலடி30க்கு மனை முக்கால் இந்த முக்கால் மனையிலிருக்கப்பட்ட தென்ன மர முதலான பல விருஷங்களும் மனைக் கெட்டி மச்சு உள்பட சுத்த கிறையம் நிச்சியித்து கும்பினி அரும்பு ரூ 174 இந்த னூத்தி யெழுவத்தினாலு ரூபாயிம் நாளது தேதியில் தம்மிடத்தில் னான் றொக்கம் பத்திக் கொண்டு மேல்படி மனையை தங்களுக்கு சுத்தக் கிறைய சாசனம் பண்ணிக் குடித்தபடியினாலெ ஆச்சந்திறாக்கஸ்த்தாயியாய் புத்திர பவுத்திர பாரம்பரியமாயி தானாதி வினிமய விக்கிறயங்களுக்கு யோக்கியமாய் நிதி நிக்ஷேபம் செலதருபாஷாண அஷ்ட்ட போக தேசசுவாமியங்களும் தாங்களெ அனுபவிச்சுக்கொண்டு சுகத்திலேயிருப்பாறாகவும் யிந்தப்படி தஞ்ச நகரம் சீர்மை றாசமன்னார் கோவில் அக்கிறாரம் முதல்த்தெரு தென்சிறகில யிருக்கும் கோபாலய்யர் உள்ளிட்டாருக்குகொண்டயம் பேட்டை யிலிருக்கும் சுப்பயன் மனை சுத்தகிறைய சாசனம் பண்ணிக் குடுத்தோம்.

1832 வருஷம் அக்டோபர் மாதம் 6 தேதி தெவறாலயன் குமாரன் சுப்பய்யன் சமதி சாஷிகள் சேஷாசலமய்யன் குமாரன் றாமய்யன் அறிவேன் கொண்டயம் பேட்டை கோபாலமய்யன் அறிவேன் ரட்டிராயர் குமாறர் கிஷ்ணராயர் அரிவேன் தற்குறி நஞ்சம்மாள் [ஆனைபிள்ளை] குமாரந் சிதம்பரம் [பிள்ளை] அரிவேன்

வெங்கிடசுப்பய்யன் குமாரன் ஸ்ரீனிவாஸய்யன் அரிவேன் யிந்த சாசனம் யெழுதின து கிறாம கணக்கு சபாபதி பிள்ளை வெங்கடாசலமய்யன் அரிவேன் வெங்கிட்டறாயர் குமாறன் திருமலைறாவு அரிவேன் சுப்பறாயர் சாத்தியாற் குமாறன் ராமாறாவு அரிவனே் பொய்யாமுழு ஸ்ரீனிவாசய்யன் அரிவேன் சுப்பய்யருக்கு மனை சுத்தக்கிறைய சாசனத்துக்கு விற்கப்பட்டது 1832 வருஷம் அக்டோபர் மாதம் ரூ 2 வீராசாமி முதலி ஷ்டாம்பு தாறொகர்.

(பொக்கிஷம்)*

---

* இங்கு பொக்கிஷம் என்ற முத்திரை பதிக்கப்பட்டுள்ளது.

2. மனை சுத்தக் கிரய சாசனம்

(1832 அக்டோபர் 11)

சொஸ்த்த ஸ்ரீசாலியவாகன சகாற்த்தம் 1754 கலியுக வருஷம் 4933 இதின்மேல்ச் செல்லாநின்ற வருஷம் 1832 வருஷம் அக்டோபர் மாதம் 11 தேதிக்கி தமிள் நந்தன வருஷம் புரட்டாசி மாதம் 28 தேதி தஞ்சநகரம் சீர்மை றாசமன்னார் கோவில் அக்கிறாரம் முதல்த்தெரு தென்சிறகிலிருக்கும் அசுவத்தறாய்யன் பவுத்திரன் றாமசுவாமியன் புத்திரன் இப்போது திருச்சினாப்பள்ளி சுபா கிஷ்ணபூபால சமுத்திரத்திக்குப் பிறிதி னாமமான கொண்டையம் பேட்டையிலிருக்கு மராமத்து கோபாலய்யர் உள்ளிட்டாருக்கு மேல்படி கொண்டையம் பேட்டை அக்கிறாரத்திலிருக்கும் சேஷய்யன் பவுத்திர மிஷ்டான சுப்பயன் புத்திரன் றாமய்யன் மனை சுத்தகிறைய சாசனம் பண்ணிக்குடுத்தபடி யென்ன மென்றால் இவகரம் கிறாம கிணசங்காபாக மனை 58ல் தென்கிழகில் துறையூர் றாமசுவாமியன் மனைக்கி மேர்க்கு தாங்கள் தேவரய்யன் குமாரன் சுப்பயனிடத்தில் சுத்த கிறையம் வாங்கின மனைக்கி கிளக்கு வீதிக்கி தெற்க்கு காவல்க்காறன் குடியிருப்புக்கு வடக்கு கொல்லை வாய்க்கால் தென்பிறம் தலைமாடு உள்பட இன்னாங்கில் உள்பட்ட கீள்மேலடி 15க்கு மனை காலே அரைக்கால் இந்த காலே அரைக்கால் மனையிலிருக்கப்பட்ட தென்னமர முதலாகிய பல விருஷங்கள் கட்டு கோப்பு உள்பட சுத்தகிரையம் நிச்சயித்து கு. அரும்பு ரூ13 1/8 இந்த பதிமூனே அரைக்கால் ரூபாயிம் நாளது தேதியில் தம்மிடத்தில் னான் றொக்கம் பத்திக்கொண்டு மேல்படிமனையை தங்களுக்கு சுத்தகிறைய சாசனம் பண்ணிக் குடுத்தபடியினாலெ ஆச்சந்திறாற்க்க ஸ்தாயியாய் புத்திர பவுத்திர பாரம்பரியமாய் தானாதி வினிமய

விக்கறையங்களுக்கு போக்கியமாய் நிதிநிட்க்ஷேப செலதரு பாஷாண அஷ்ட்டபோக தேச சுவாமியங்களும் தாங்களே அனுபவிச்சுக் கொண்டு சுகத்திலெ யிருப்பாறாகவும் யிந்தபடி கோபாலயர் உள்ளிட்டாருக்கு றாமய்யன் மனை சுத்த கிறைய சாசனம் பண்ணிக் குடுத்தேன் யிந்த சாசனம் யெழுதினது கிறாமக்கணக்கு சபாபதிபிள்ளை வெங்கிடசுப்பயற் குமாறன் ஸ்ரீனிவாஸய்யன் அரிவேன் சேஷாசலமய்யன் குமாரன் றாமய்யன் சம்மதி அரிவேன் தேவிராமயன் குமாரன் சுப்பய்யன் அரிவேன் ரட்டிராயெர் குமாறன் கிஷ்ணராயர் அரிவேன்.

3. நிலப்பிரியல் சீட்டு

(1837 டிசம்பர் 29)

யேற்விளம்பி வருஷம் மாற்கிழி மாதம் 16 தேதி தத்தனூரிலிருக்கும் அண்ணாச்சாமி னா*க்கு திருவறம்பூரிலிருக்கும் கொழந்த வேலம்பிள்ளை காவேரி ஆயி யிறுபேறும் நஞ்சை நிலப் புறியல் சீட்டு யெழுதிக்குடுத்தபடி என்னமென்றால் நாளது தேதியி தமக்கு நாங்கள் சுத்தக்கிறைய சாசனம் பண்ணிக்குடுத்த கீழ் வாளாடி பங்கு 3/8 க்கு நஞ்சை நிலம் புறிச்சுவிட்டது: மேற்படிகிறாமம் உள்வயலில் கீழ் செறுக்கானடி செயி 1ல் வடபாதி செயி 1/2க்கு புள்ளி நெல்லு நெல் 40 கலம் ஆத்தக்கால் படுகையில் கெழக்கு முதல் கொண்டு 2-வது வண்ணான் முடுக்கு செய்...புள்ளி நெல்லு நெல் 34 கலம் கீழ்படுகை மேலப்புறியலில் செய் 1/8க்கு புள்ளி நெல்லு நெல் 10கலம் ஆக செய் 1 5/8க்கு புள்ளி நெல்லு நெல் 84 கலம் இ பங்கு 3/8 யிந்த காலெ அரைக்கால் பங்குக்கும் மேலெழுதிய நிலங்களை போருமான புள்ளியாக நாங்கள் மனொறாசியாயி புரிச்சிவிட்டு யிருக்கிற படியினாலெ மேற்படி நிலங்களை மேற்படி சுத்த கிரைய சாசனவாசகப்படிக்கி தாம் ஆண்டு அனுபவச்சுக் கொள்ளுவாறாகவும் யிந்தப்படி சம்மதிச்சு நஞ்சை நிலப் புறிய சீட்டு யெழுதிக் குடுத்தோம் யிந்தபடி சம்மதிச்சி குளந்த வேலம்புள்ளை சம்மதி. யிந்த சீட்டு யெ ழுதினது துரையூர் தேவங்க பெருமாள் பிள்ளை நெட்டெழுத்து. யிந்த கீறல் காவேரி ஆயி சம்மதி வள்ளடி சுப்பய்யன் அருவேன். செருமருதூற் வெங்குவய்யன் அறிவேன். கிறாமகணக்கு பிச்சுவயன் அறிவேன். திருவாழிந தாயுமான பிள்ளை அறுவேன். சின்ன மகாதேவய்யன் அரிவேன். சிறுமருதூரு கணக்கு றாமய்யன் அறிவேன். ஐயா தொரைய்யன் அறிவேன்.

---

*னா = னாடான்?

4. மனை சுத்தக் கிரய சாசனம்

(1839 பெப்ரவரி 17)

ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாஉறந சகாப்தம் 1760 கல்யப்த: 4939 யிதின் மேல் செல்லா நின்ற விளிம்பி வருஷம் மாசி மாதம் 7 தேதி இ. 1839 வருஷம் மரிச்சு (?) மாதம் 17 தேதி கொண்டயம் பேட்டையிலிருக்கும் பாபுறாயற் குமாறன் லெக்ஷுமண றாயறுக்கு மேற்படி யூறிலிருக்கும் றெட்டிறாயர் குமாறன் கிறுஷ்ணறாயற் மனை சுத்தகிறய சாசநம் பண்ணிக்குடுத்தபடி யென்னமென்றால் மேற்படிகிறாமம் கெணசங்கை பாகம் மனை 58ல் கிறுஷ்ணசேடாவல்லபர் மனைக்கு கிழக்கு அப்பாத்துறைய்யன் மனைக்கு மேற்கு தெறு வீதிக்கு வடக்கு கொல்லை வாயிக்காலுக்கு தெற்க்கு யின்னாங் கெல்கைக்கு உள்ப்பட்ட யென் மனை 1 1/2 யில் நாளது தேதியில் கிறுஷ்ண செடா வல்லபனுக்கு சுத்தகிறய சாசநம் பண்ணிக்குடுத்தது மனை . . . க்கு அடி 5 . . . மனை சுக்கு அடி - 50 - யிந்தமனை - 1 1/4 . . . க்கு அடிஅன்பதுக்கு கிறயம் உபயாநுமதியில் நிச்சியித்தது கும்பிநி ரூ50 - யிந்த அன்பது ரூபாயும் உள்ளூர் னோட்டம்பார்வையில் [தங்களிட நிலனும்] ரொக்கம்பத்திக் கொண்டபடியினாலெ மேற்படி மனையிலுள்ள நிதி நிக்ஷேபம் செல தறுபாஷாணாஷ்ட போக சுவாமியங்களும்' தானாதி விநிமந விக்கிரயங்களுக்குப் போக்கியமாகவும் புத்திறபவுத்திற பாறம்பறியமாக ஆசந்திறார்க ஸ்தாயியாயி தாங்களே ஆண்டனுபவித்து கொள்வானாகவும் யிந்தபடிக்கு லெக்ஷுமணறாயறவர்களுக்கு கிறுஷ்ணறாயர் உள்ளத்தார் மனை சுத்தகிறய சாசநம் பண்ணிகுடுத்தோம் கிறுஷ்ணராயர். சாக்ஷியள் . . . கிறாமகணக்கு சின்னியபிள்ளை அறிவேன். அப்பு சோசியர் அரிவேன். கிஷ்ணசடாவல்ல அரிவேன் மேற்படி யூற் றாமசுவாமியள் அரிவேன் வறுதஅய்யங்காற் குமரன் நாரயாணஅய்யங்காற் சேஷய்யங்கார் அரிவேன் . . . ஆங்கரை வெங்கடாசலமய்யன் அரிவேன் அ . . . சாஸ்திரியளு அறிவேன். யிந்தசாசநம் யெழிதினது கோபாலய்யன் நெட்டெழுத்து.

5. பங்கு ஈட்டு மேல் கடன்முறி

(1841 நவம்பர் 20)

(ஒரு ரூபாய் ஓலை)

1841 வருஷம் நவம்பர் மாதம் 20 தேதிகி தமுழ் பிலவ வருஷம் கார்திகை மாதம் 8 தேதி ஆங்கரை யிலிருக்கும் கோதண்ட ராமய்யன் புத்ரர் பெரிய வெங்கிட சுப்பய்யன் னாகிய றாசதானிய்யன் உள்ளதாறுக்கு நெரிஞ்சிலகுடியில் யிருக்கும் வறத்றாசய்யன் புத்திரன் சுப்பராயற் பங்கு ஈட்டுமேல் கட்ன் முறியமெழுதிக் குடுத்தபடிய எனமெண்டால் மேற்படி கிறாம கெணசங்கா பாகம் பங்கு 64லில் யென் சொந்தமான பங்கு 23 இதில் தமக்கு ஈடுவச்சது பங்கு 8 யிதின் பேரில் கடன்னாக வாங்கின கும்பிநி அறும்பூ ரூ500 யிந்த அஞ்சு னூருரூபாயும் னான் ரொக்கம் பத்திக்கொண்டபடியினாலே மேற்படிரூபாயிக்கி யிம்மாசம் முதல் மாசம் 1க்கு நூத்துக்கு ஒரு ரூபாயி கந்துவட்டிகூட்டி கூடிய வட்டியும் முதல் ரூபாயும் யிது நடுத்த சுபகிறுது வருஷம் அற்பசிமாதம் 30ம் தேதி வரையில் ரொக்கத்தில் செலுத்திவிச்சு யிந்தபத்திரத்தெ வாங்கிகொள்ளுவேனாவும் யிந்தகெடுவில் செலுத்தாவிட்டால் தமக்கு கூடிய வட்டியும் முதலும் மேற்படி ஓடயான் வேண்டும்போது ரொக்கத்தில் செலுத்திவிடுப்பேனாகவும் யிந்தப்படிக்கு சம்மதிச்சு பெறிய வெங்கடசுப்பய்யன்னாகிய றாசதானிய்யன் உள்ளதாறுக்கு சுப்பறாயர் பங்கு ஈட்டு மேல் கடன்பத்திரம் யெழுதிக் குடுத்தோம் யிந்தப்படி சுப்பறாயன் கையெழுத்து சாட்சிகள் ஆங்கரை முத்துறாமய்யன் புத்தரன் றாமய்யன் அறிவேன் ஆங்கறை கிறாம கிரஷ்ணசாஸ்த்ரிய ளறிவேன் இவர்கள் அரிய இந்த பத்திரம் யெழுதினது ஆங்கறை கிராமகணக்கு காசியன் (ஓலை)யெழுத்து.

நம்பர் 1841 வருஷத்தியநம்பர் 177.

லாலுகெடி தாலுகா நெறிஞ்சிலிக்குடியிலுருக்கும்வறதறாசய்யன் குமாறன் சுப்பறாயனுக்கு நஞ்சைபுஞ்சை நிலத்தின்பேறில் ரூ500க்கு யீட்டுக் கடன் பத்திரத்துக்கு மேற்படியாற்குமாறன் அய்யாசாமிய்யன் வசம் ஒருரூபாயி ஷ்டாம்புள்ள ஓலை விற்க்கலாச்சுது. 1841 வருஷம் நவம்பற் யாதம் 16தேதி. வீராசாமி முதலி ஸ்டாம்பு தாறொகா.

(பொக்கிஷம்).

6. பங்கு ஈட்டு மேல் கடன்முறி

(1841 நவம்பர் 20)

(நாலணா ஓலை)

1841 வருஷம் நவம்பர் மாதம் 20 தேதிக்கு தமுழ் பிலவ வருஷம் காற்த்திகை மாதம் 8 தேதி ஆங்கரையில் யிருக்கும் கோதண்டராமய்யன் புத்தரன் பெரிய வெங்கிடசுப்பயனாகிய றாசதானிய்யன் உள்ளத்தாறுக்கு நெரிஞ்சல குடியில் யிருக்கும் வறதறாசய்யன் புத்தரன் சுப்பறாயற் பங்கு ஈட்டுமேல் கடன்முறி யெழுதிகுடுத்தப்படி யென்னமெண்டால் [யிது வாளது] னாள் மேற்படி கிறாமகெணசங்காபாகம் பங்கு 64லில் யென் சொந்தமான பங்கு 23 இதில் தம்மயெடத்தில் ஈடுவச்சது பங்கு 8 போக பாகி பங்கு 12 [இத்தில்] தமக்கு ஈடு வச்சது பங்கு 1 யிதன் பேரில் கடனாக வாங்கினது கும்பினி அறும்பு ரூ 90 யிந்த தொன்னு ரூபாயிக்கும் இம்மாசம் முதல் மாதம் 1க்கு னூத்துக்கு ஒருரூபாயி வீதம் கூடிய வட்டியும் முதலும் இது நடுத்த சுபகிறது வருஷம் மாற்கிழி மாதம் 30 தேதி வரையில் செலுத்திவிச்சு பத்தரம் வாங்கி கொள்ளுவேனாகவும் யிந்த கெடுவில் செலுத்தாவிட்டால் மேற்படிய் வட்டியும் முதலும் ஓடயான்வேண்டும் போது குடுபேனாகவும் யிந்தபடிக்கு சம்மதிச்சு பெரியவெங்கிடசுப்பயன் னாகிய றாசதானிய்யந் உள்ளத்தாறுக்கு சுப்பறாயன் பங்கு ஈட்டு மேல் கடன் பத்திரம் யெழுதி குடுத்தோம் யிந்தபடி சுப்பறாயன் கையெழுத்து, சாட்சிகள், ஆகங்கரை முத்துறாமய்யன் புத்திரன் றாமயன் அறிவேன். ஆங்கறை றாமகிரஷ்ண சாஸ்திரியளறிவேன். இவர்கள் அரிய இந்த பத்திரம் யெழுதினது ஆங்கரை கணக்கு காசிய்யன் ஓலையெழுத்து

லாலுகெடி தாலுகா நெறிஞ்சிலகுடியிலுருக்கும் வறதறாசய்யன் குமாரன் சுப்பறாயனுக்கு நஞ்சை நிலத்தில் பேரில் ரூ 90க்கு யீட்டு கடன்பத்திரத்துக்கு மேற்படியார் குமாரந் அப்பாசாமியய்யற் வசம் கால் ரூபாயி [ஸ்டாம்பு] யுள்ள ஓலை விற்க்கலாச்சுது 1841 வருஷம் நவம்பர் மாதம் 16 தேதி. வீராசாமி முதலி, ஷ்டாம்பு தாறொகர். 1841 வருஷத்திய நம்பர் 688.

(பொக்கிஷம்)

7. உடன்படிக்கைச் சீட்டு

(1844 மார்ச் 10)

சோபகிறுது வருஷம் மாசி மாதம் 29 தேதி சிருமறுதூரில் யிருக்கும் ராமய்யனுக்கு வாளாடியிலிருக்குற அய்யாதுறய்யன் சுப்பய்யன் சின சுப்பய்யன் நாங்கள் மூன்று பேறும் யெழுதிக்குடுத்த ஒடம்படிக்கை சீட்டு யென மெண்டால் மேற்படி வாளாடி அக்கிறகாறம் வடசெறகில் தான் வீடு கட்டுகுற் மனைக்கி கிழக்கு யெங்களுடைய சொந்தமான மனை மேல்புறத்து செவறை நாங்கள் கட்ட வேண்டியதாயிருக்கயில் யிப்போது தான் கட்டுகிற வீட்டுக்கு மறவாயிருக்கவேண்டிய அவசரத்தை பத்தி மத்தியஸ்த னாகிய வாளாடி மருதயா பிள்ளை தீற்வானபடிக்கு தானும் நாங்களும் சம்மதிச்சு மேற்படிசெவறை கீழ் மேல் அடி 2 தென்வடல் அடி 66க்கு அஸ்திவாறம்முதல் உத்திரமட்டம்வறக்கும் தானே செங்கல் கொத்து கூலி முதலான சகலசிலவும் செயிது செவற கட்டறபடியினாலெ யினிமேல் யெங்களுக்கு வீடு கட்டிகொள்ளும்போது மேற்படி செவறுக்கு நாங்களே சொதந்திறக்காறற்களாயிருந்து சகலவேலையும் செயிதுகொள்ளு வோமாகவும் நாங்கள் மச்சாவது கூறைக்கட்டாவது கட்டவேண்டி யிருந்தால் தான் கட்டுகுற கீழ்புறத்து கொசலி மட்டும் இடிச்சி கட்டிகொள்ளுவோமாகவும் மேற்படி செவறுக்கு செங்கல் முதலான சிலவுக்காக கூடுதலான ரூபாயை தனக்கு நாங்கள் குடுக்கவேண்டியதிலை யிந்தபடி சம்மதிச்சு ஒடம்படிக்கைசீட்டு யெழுதி குடுத்தோம் ஐயா தொரைய்யன் கை எழுத் து . சுப்பய்யன் காரியம் சுப்பய்யன் கைழுத்து. யிந்த சீட்டு யெழுதினது வாளாடிகிராம் கணக்கு பிச்சுவயன் யெழுத்து. அ . . . குட்டி சாஸ்தியளரிவேன். [மத்யத்தமான] மருதயாபிள்ளை சாட்சி.

8. நிலம் போக்கிய முறி

(1844 ஆகஸ்டு 26)

(நாலணா ஓலை)

1844 வருஷம் ஆகொஷ்ட்டு மாதம் 26 தேதி தமிள் குறோதி வருஷம் ஆவணி மாதம் 13 தேதி கொண்டையம் பேட்டையில் யிருக்கும் வெங்கடசுப்பஅய்யற் குமாரன் கோபால அய்யன் திருவானைக்காவல் நத்த தெருவில் யிருக்கும் தேவறாய [பிள்ளை] குமாரன் முத்துச்சாமி பிள்ளைக்கி நஞ்ச நிலம் போக்கிய முறியெழுதி குடுத்தபடி யென்னமென்றால், மேற்படி கிறாமத்தில் நம்முடைய சொந்தமான பங்கெச் சேந்த நஞ்ச நிலத்தில் அப்பாசி அய்யன் பனையடிக்கி தெற்க்கு கீள்மேலான வடி வாயிக்காலுக்கு வடக்கு தென் வடலான வடிவாடிக்காலுக்கு மேற்க்கு குப்ப அய்யன் . . . பனையடிக்கி கிளக்கு மேற்படியான னாங்க யெல்லைக்கு உப்பட்ட பனையடி செய் 1 யிந்த நஞ்செய்யும் தம்முடத்தில் போக்கியமாகவச்சு அதின்பேறில் வாங்கினது கும்பினி சிலாமணி ரூ 100 யிந்த நூருரூபாயும் தம்மிடத்தில் னான் றொக்கம் பத்திக் கொண்று . . . வச்ச படியினாலெ மேற்படி நிலத்தில் தாம் வேண்றும் பலனையிட்டுக் கொண்று சருக்காற் வறி யெரை ஆள் ஆமஞ்சி யெப்பேற்பட்டதும் தாமேகுடுத்துக் கொண்று வருவனாகவும் யெந்த சித்திரை காலாவதியில் னாம் பணம் செலுத்துகுறோமோ அப்போது முதலுக்கு முதலே பணம் வாங்கிக் கொண்று சருக்கார் நிலுவை சுத்தகறிச்சு நிலம் விட்டு விடுவனவாகவும் மேற்படி நிலத்தில் தாம் நில வெட்டுப் போட்டால் கணக்கபிள்ளை அத்தாஷ்சி படிக்கி . . . ஒத்துக்குடுப்பேனாகவும் யிந்தபடிக்கி சம்மதிச்சு முத்துச்சாமி பிள்ளைக்கி கோபால அய்யன் போக்கிய முறி யெழுதி குடுத்தேன். யிந்தப்படி கோபாலய்யன் சம்மதி. சாஷ்சிகள் சேஷய்யங்காற் அரிவேன் அறியமுத்து பிள்ளை அரிவேன் மதுரனாயம் பிள்ளை அரிவேன், நறசய்யன் அறிவேன். யிந்த சீட்டு யெழுதின கிறாம கணக்கு சிந்னியபுள்ளை நெட்டு யெழுத்து. சோமசுந்தரம் பிள்ளை அரிவேன். யிதுக்கு கெடு அஞ்சு வறுஷத்துக்குள்ளாக செலுத்திவிசு நிலத்தை மீன்று கொள்வேனாகவும் கோபாலய்யன் சம்மதி.

1844 வருஷத்திய நம்பர் 1000 லாலுகெடி தாலுகா கொண்டையம் பேட்டையிலுருக்கு வெங்கிடசுப்பய்யந் குமாரன் கோபாலய்யருக்கு நஞ்சை நிலத்தின்

பேரில் ரூ 100க்கி போக்கிய பத்திரத்திக்கு மேற்படியார் தம்பி அய்யாவய்யர் குமாரன் சுப்பராயர் வசம் கால் ரூபாய் விலையுள்ள ஓலை விற்க்கலாச்சுது 1844 வருஷம் ஆகஷ்ட்டு மாதம் 9 தேதி வீராசாமிமுதலி ஷ்டாம்பு தாறொகர்.

(பொக்கிஷம்).

9. சாமிபோகச் சீட்டுக்கு எதிர் நடைச்சீட்டு

(1844 ஆகஸ்ட்டு 26)

குறோதி வருஷம் ஆவணி மாதம் 13 தேதி கொண்டையம் பேட்டையிலிருக்கும் கோபாலஅய்யன் திருவானைக்காவல் நத்த தெருவில் யிருக்கும் முத்துச்சாமியா பிள்ளைக்கு] சாமி போக சீட்டுக்கு வெதிநிடைசீட்டு யெழுதி குடுத்தபடி யென்னமென்றால்: மேற்படி கொண்டையம்பேட்டை கிறாம்மத்தில் யென் சொந்தமான பங்கெச் சேந்த நஞ்சை நிலத்தில் பனையடிசெய் 1 யிந்த நஞ்சையி நிலத்தையும் தம்முடத்தில் போக்கிமாக வச்சு அதின்ம் பேறில் கும்பினிரூ 100 யிந்த னூருரூபாயும் னான் வாங்கிக் கொன்று போக்கியம் விட்டுயிருக்குற மேற்படி நஞ்செயி நிலத்தையும் சாமி போகத்துக்காக தம்முடத்தில் [மருபடியும்] னான் ஒப்புக்கொண்டபடியினாலெ மேற்படிநிலத்தில் வேண்றும் பயிறை யிட்டு னான் அனுபவிச்சுக் கொண்று நாளது வருஷத்துக்கு சாமி போகம் ரூ 9 [வருகிற] வருஷமுதல் வருஷம் 1க்கு ரூ12 ரூபாயி வீதம் வருஷாவருஷம் தமக்கு செலுத்தி வச்சுக் கொன்று வருவேனாகவும் யெந்த சித்திரை காலாவதில் னான் போக்கிய பணம் செலுத்து குடுகிறேனோ அப்போது முதலுக்கு முதலே பணம் வாங்கிக் கொண்று நிலம் விட்டுவிடுவனாகவும் பின்னும் யெந்த வருஷத்திலெயாவது . . . கன்ற பணத்திலேயாவது சரிவறச்செலுத்தாமல் பாக்கியிருந்தால் உடனே மேற்படி நிலத்தெ தாமே அனுபவிச்சுகொண்று போக்கியசீட்டுல் கண்டபடி அனுபவித்துவருவனாகவும் யெந்த சித்திரை காலாவதியில் போக்கியபணம்செலுத்துகுறோநோஅப்போது முதல் பணமும் தாம் நிலம் வெட்டுப் போட்டுயிருந்தால் அதற்க்கு ஊற் ஒப்பந்தம் வெட்டுப்பணமும் சாமி போகத்திலேயாவது சருக்காற் பணத்திலே யாவது பாக்கி நின்னபணத்துக்கு . . . பணம் வீதம் கூடிய வட்டியும் சேத்து செலுத்திவச்சு நிலத்தெ . . . கொள்ளு வேனாகவும் யிந்தபடிக்கு முத்துச்சாமி . . . கோபாலஅய்யன் சாமி போகசீட்டுக்கு

யெதிறிடை சீட்டு யெளுதி குடுத்தேன் யிதுக்காக செலுத்தப்பட்ட பணத்தை மேற்படி சீட்டுலே வருஷாவருஷம் செல்லு வச்சு குடுப்பேனாகவும் யிந்தபடி கோபாலய்யன் சம்மதி.

சாட்சியள்: சேஷய்யங்காற் அரிவேன். அறியமுத்தான் அரிவேன். மதுரனாயகம் பிள்ளை அரிவேன். யிந்த சீட்டு யெழுதினது கிறாம கணக்கு சின்னியன் நெட்டு யெழுத்து. நறசய்யர் அறிவேன். சோமசுந்தரம்பிள்ளை அரிவேன். வெங்கடாசலமய்யன் அறிவேன். விசுவாவசு வருஷம் ஆனி மாதம் 31 தேதி சாமி போகத்துக்கு செல்லு ரூ 1/2 விசுவாவசு வருஷம் பங்குனி மாதம் 10 தேதியில் சாமி போகத்துக்கு செல்லு ரூ13 1/2 குறொதி வருஷம் மாசி மாதம் 17 தேதி சாமி போகத்துக்கு செல்லு ரூ10.

10. ஈட்டுக்கடன் முறி

(1845 ஜூலை 10)

நெரிஞ்சல்குடி மூலயீட்டு பத்திரம்

விச்வாவசு வருஷம் ஆனிமாதம் 28 தேதி ஆங்கறையில் இருக்கும் றாச தானிய்யனாகிய பெரிய வெங்கட சுப்பய்யற் உள்ளத்தாற் தத்தனூ றில் இருக்கும் செம்பறை முத்து லாற்குடான் மகன் வேலாயுதத்துக்கு யெழுதிகுடுத்த ஈட்டு கடன்முறி யென்ன மென்றால்: யெனக்கு சொந்தமான நெறிஞ்சலகுடி கிறாமத்தில் படுகையில் கலுமறம் சுத்தி யெல்லைக்கி வடக்கு மலட்டாத்துக்கு தெற்க்கு ஆனைய்யன் வயலுக்கு கிழக்கு மேற்படி ஆனைய்யன் வயற்கு மேற்க்கு இநானாங்கெல்லைக்கி உள்பட்ட சோலைமோட்டு கட்டளை செய் 1/2 யிந்த அறை செய்யும் பேறில் கடனாக வாங்கி னது ரூ55 யிந்த அன்பத்து அஞ்சு ரூபாயும் னான் ரொக்கம் பத்தி கொண்ட படியினாலே மேற்படி ரூபாயிக்கி யிம்மாசம் முதல் [ரூ 100க்கு ரூ 1 வீதம்] வட்டி கூட்டி யேறின வட்டியும் முதல் ரூபாயும் இதினடுத்த அய்பிசி மாதம் 30 தேதி ரொக்கத்தில் செலுத்திவச்சு யிந்த பத்திரத்தை வாங்கி கொள்ளுவேனாகவும் யிந்த படிக்கி ஈட்டு கடன்முறி யெழுதி குடுத்தேன் யிந்தபடிக்கு பெரிய வெங்கிட சுபய்யற் சம்மதி. சாட்சி, தத்தனூற் கிறாமம் கணக்கு வயித்தினாதய்யன் அரிவேன். பம்பறஞ்சுத்தி கோயில் இறுவினாய்ய அறிவேன்.

மேற்படியூற் மருத ஸ்ரீஅறிவேன். யிந்த சீட்டு யெழுதினதுஆங்கறை முத்துவய்யன் . . .

யிந்த பத்திறத்துக்காக நாளது ஆனந்த வருஷம் மார்கழி மாதம் 30 தேதி வரையில் அசல் வட்டியிட்டு [முதலு] . . . தேதியில் செலு றாமச(ந்தி)ற றாயற் அவாளிடத்தி வாக்கிகொண்டது ரூ 70 யிதுமுன் றாசதானிய்யடத்தி பத்திக் கொண்டது ரூ 42 3/4ஆக ரூ112 3/4 . . . வெயாசி மாதம் . . .

11. ஒத்தி உடன்படிக்கைச் சீட்டு

(1846 மார்ச் 23)

விசுவாவசு வருஷம் பங்குனி மாதம் 12 தேதி கொண்டயம் பேட்டை யிலிருக்கும் வறதய்யங்காற் குமாறன் னாறணய்யங்காருக்கு மேற்படி யூரிலிருக்கு கோபாலய்யன் உள்ளத்தாற் யெழுதிக் கொடுத்த ஒடன் படிக்கை யென்ன மெண்டால் மேற்படி கிறாமத்தில் யென்னுடைய சொந்தமான பங்கு 1 1/2யில் தமக்கு 63 ரூபாயிக்காக ஒத்தி வைப்பித்துருக்குற பங்குநிலத்துக்கும் பள்ளத்தெரு பிஞ்சை திவிதியனி வெசனம் முதலானது உள்ளதை தமக்கு புறிச்சு விடாதுனாலெ மேற்படி நிலம்பங்குக்கும் . பத்துக்காட்டுபுஞ்சை மனைவரி முதலான வருமானங்கள் வருஷம் 1க்கு பணம் 5 1/2 யிந்த அஞ்சரை பணத்துக்கும் விசுவாவசு வருஷம் வறக்கும் தமக்கு உள்ள பணத்தை செலுத்திவிச்சி பறாபவ வருஷம் முதல் வருஷம் க க்குமேற்படி நிலம் பங்குக்கும் 5 1/2 பணத்துக்காக யென்னுட சொந்தமான பங்கச்சேற்ந்த யிட்டா செயி யெக்கால் றெகுனாதய்யங்காற் புரியலில் சந்தறசேகறம்பிள்ளை அனுபோகம் றெண்டு பங்கு புறியலில் வடபறம் நம்மடபாதிக்கி கரையிட்டு குழி 9 குழி நிலத்தையும் தாமனுபவிச்சுகொண்டு வருவாறாகவும் மேற்படி நிலம் பங்கும் னாம் முழிக்கும்போது மேற்படி நிலத்தை யென்னுடவசம் விட்டுவிடுவாறாகவு பின்னும் மேற்படி நிலத்தில் தாம் னில வெட்டுப் போட்டால் கணக்குப்பிள்ளை அத்தக்ஷிப் படிக்கு உள்ள வெட்டுபணத்தை ஒத்தி பணத்துடனே சேத்து செலுத்திவிச்சி நிலத்தை ஒப்புக் கொள்ளுவேனாகவும் யிந்தப்படிக்கு னாரணய்யங்காறுக்கு கோபாலய்யன் ஒடன்படிக்கை சீட்டு யெழிதிக் கொடுத்தேன் யிந்தப்படி கோபாலய்யன் சம்மதி.

குப்பாதீக்ஷனரிவேன். சிதம்பறம் பிள்ளை அரிவேன். வெங்கடாசலமய்யன் அரிவேன். சுப்பிறமணியபுள்ளை அறிவேன்.

12. உடன்படிக்கைச் சீட்டுக்கு எதிர் நடைச்சீட்டு

(1846 மார்ச் 23)

விசுவாவசு வருஷம் பங்குனி மாதம் 12 தேதி கொண்டயம்பேட்டை யிலிருக்கும் கோபாலய்யறக்கு மேற்படி யூரிலிருக்கும் வறதய்யங்கார் குமாறன் னாறணய்யங்கார் யெழுதிக் கொடுத்த ஒடன்படிக்கை சீட்டுக்கு யெதிர்நடைசீட்டு யென்னவெண்டால் மேற்படி கிறாமத்தில் தங்கள் சொந்தமான பங்கு 1 1/2யில் யெனக்கு போக்கியம் வையித்துருக்குற பங்கு . . . க்கு பங்கைச் சேர்ந்த சுவற்ணாதாயம் மனைவரி .... வருஷ 1க்கு அஞ்சறை பணம் யிந்த அஞ்சறை பணத்துக்காக தங்கள் பங்கைச் சேற்ந்த பாட்டா செயியெக்காலில் ரெகுனாதய்யங்காற் அரை பங்கு புரியிலில் வடபுறத்தில் கரையெட்டு குழி 9ம் யிந்த ஓம்பது குழினிலத்தையும் னான் ஒப்புக்கொண்டுருப்பதுனாலெ மேல்க்குறித்த வருஷம் 1க்கு 5 1/2 பணத்துக்காக மேற்படி நிலத்தை னானனுபவித்துக் கொண்டு பங்கு மூளும் போது மேற்படிநிலத்தையும் தம்முடைய வசம் விட்டு விடுவேனாகவும் பின்னும் மேற்படி நிலத்தில் வெட்டு போட்டால் கிறாம கணக்கு பிள்ளை அத்தாக்ஷிப்படிக்கு உள்ள பணத்தை வாங்கிக் கொண்டு நிலத்தை விட்டுவிடுனோகவும் யிந்தபடிக்கு கோபாலய்யனுக்கு னாறணய்யங்காற் ஒடன் படிக்கை சீட்டுக்கு யெதிற் நடைசீட்டு யெழுதிக் கொடுத்தேன். னாரணய்யங்காற் குப்பாதீக்ஷனரிவேன். சுப்பிரமணியபிள்ளை அறிவேன். சிநபெருமாள் அரிவேன். வெங்கடாசலமய்யன் அரிவேன்.

13. போக்கியச்சீட்டு

(1846 மார்ச் 23)

விசுவாவசு வருஷம் பங்குனி மாதம் 12 தேதி கொண்டயம் பேட்டையிலிருக்கும் வறதய்யங்காற் குமாறன் னாறணய்யங்காருக்கு மேற்படி யூரிலிருக்கும் கோபாலய்யன் உளத்ததாற் போக்கிய சீட்டு யெழுதிக் கொடுத்தபடி யென்ன வெண்டால் சோபகிறது வருஷம் மாசி மாதம் 1 தேதியில் தம்முடபேறால் யெழுதிக் கொடுத்த கடன் சீட்டுக்கு கும்பினி ரூ 22க்கு தள்ளிக்குடுத்த ரூ 1 3/8போக பாக்கி ரூ 20 5/8 யிதுவும் தமக்கு னான் குடுக்க வேண்டியது தம்மிடத்தில் பங்கு ஒத்தி வச்சு யிருக்றகுதர்க்கு புஞ்சை வகையறா கூடுதல் வருஷம் 1 க்கு பணம் 5 1/2 ஆக வருஷம் 2க்கு பணம் 11க்கு ரூ1 3/8 ஆக ரூ 22 யிந்த ரூ 22 ரூபாயிக்கும் நம்முடைய சொந்தமான பங்கைச் சேர்ந்த திவிதிய வாஸ்து மனை சந்தரசேகறம் பிள்ளை பங்கைச் செற்ந்த மனைக்கு தெர்க்கு பள்ளத்தெரு பாதைக்கும் வடக்கு அய்யகளய்யன் வெட்டிக்கு மேற்க்கு தென்வடலான வீதிக்கும் கிழக்கு யிந்த னாங்கல்லைக்கு உள்பட்ட மனை பம்பறம்சுத்தியான் குடியிருப்புமனை 1/2 பெரியண்ணன் குடியிருப்பு மனை1/2 ஆக மனை 1ம் வட்டிக்கி யீடாக போக்கியமாக அனுபவிச்சுக் கொண்டு வருவாறாகவும் யெந்த சித்திரை காலாவதியில் பணம் செலுத்துகுறோமோ அப்போது முதலுக்கு முதலே பணம் வாங்கிக் கொண்டு மனையை யென்வசம் விட்டுவிடுவாறாகவும் யிந்தப் படிக்கு னாறணய்யங்காறுக்கு கோபாவய்யன் போக்கிய சீட்டு யெழுதிக் கொடுத்தேன். மேல் குடுத்த பணத்தை அஞ்சு வறுஷம் கெடுவுக்குள்ளாக செலுத்தாவிட்டால் மேற்படி மனையை [கிறயம்] பண்ணி செலுத்துவேனாகவும் அந்தபடி செலுத்தாவிட்டால் மேற்படி துகைக்கே சுத்த கிறயமாயிதாம் அனுபவிச்சுக் கொள்வாறாகவும், யிந்தப்படி கோபாலய்யன் சம்மதி. சுப்பிரணியபிள்ளை அறிவேன். சிதம்பரம் பிள்ளை அறிவேன். குப்பாதீக்ஷதனறிவேன்.

14. நிலம் ஈட்டுபேரில் கடன்முறி

(1846 ஜூலை 15)

1846 வருஷம் சூலாயி மாதம் 15 தேதிக்கு பறாபவ வருஷம் ஆடி மாதம் 2 தேதி கொண்டயம் பேட்டையிலிருக்கும் அன்னாச்சிய்யற் குமாரன் நறசய்யருக்கு மேற்படி யூறிலிருக்கும் வெங்கிட சுப்பய்யன் குமாரன் கோபாலய்யன் நஞ்சை நிலம் யீட்டு பேரில் கடன் முறி யெழுதி குடுத்தபடி யென்னமென்றால் மேற்படி கிறாமத்தில் யென் சொந்தமான பங்கை சேற்ந்த நஞ்சை நிலம் ஆதி நாறாயண பிள்ளை (காலடி)டிக்கி கெளக்கு றாமசுவாமிபிள்ளை மஞ்சள் [கடைக்கி] மேருக்கு காசிநாதடாகற் [காலடி]டிக்கி தெற்க்கு விசுவநாத சிதம்பற பிள்ளை [வட்டாசி]க்கு வடக்கு யிந்த நாங்கயெலுகைக்கு உள்பட யென் சொந்தமான காலடி செய் 1 1/8யிந்த ஒன்னெ அறக்கால் செயிம் தமக்கு யீடுகாணமயி விச்சு யிதின் பேரில் கடநாக வாங்கினது கும்பினி சிலாமணி ரூ 50 யிந்த அன்ம்பது ரூபாயிக்கும் மாதம் 1க்கு வட்டி 100க்கு 1 வீதம் வருஷா வருஷம் செலுத்திவிச்சு கொண்டு வருவேநாகவும் யெந்த வருஷத்திலாவது வட்டிபணம் சறிவற செல்லாமல் பிடியிருக்குமேயாகில் மேற்படி வட்டியும் பணத்துக்கும் முதல் பணத்துக்கும் மேற்படி நிலத்தை தாமே சுத்த போக்கியமாக அனுபவிச்சு கொண்டு சற்காற்க்கு வரி யெறை தாமே குடுத்து கொண்டு வருவாறாகவும் யெந்த சித்தறை காலாவதியில் மேல் குரித்த முதல் பணமும் வட்டிப் பணமும் செலுத்துகுரேநோ அப்போது உள்ள பணத்தை வாங்கி கொண்டு சற்க்காற்க்கு நிலுவை சுத்தி கிறச்சு நிலத்தை விட்டுவிடுவாறாகவும் மேற்படி நிலத்தில் நிலவெட்டு போட்டால் கிறாம கணக்க பிள்ளை அத்தாட்சிப் படிக்கு ஊற் ஒப்பந்தம் உள்ள பணத்தை செலுத்திவிப்பேநாகவும் யிந்தப் படிக்கு நறசய்யருக்கு கோபாலய்யன் நஞ்சை நிலம் யீட்டு கடன் முரி யெளுதி குடுத்தேன், யிந்தபடி கோபாலய்யன் சம்மதி.

சாட்சியள், வியாசுவய்யன் அரிவேன். அறந்தாங்கி ரெங்காசாரியாற் அரிவேன்.

பிலவங்க வருஷம் சித்திரை மாதம் 1 தேதி யிந்த பத்திரத்தில் கண்ட அசல் வட்டியும் செல்லு ரூ 54 1/2 நறசய்யர்.

இந்த யீட்டுப் பத்திறம் யெளுதினது திம்மறாய சமுத்திறம் கணக்கு நாறணயன் கையெளுத்து.

15. ஒத்தி உடன்படிக்கை

(1847 மார்ச் 25)

பறாபவ வருஷம் பங்குனி மாதம் 14 தேதி கொண்டயம் பேட்டையிலிருக்கும் செகநாதறாயர் குமாரன் றாமசந்திற றாயனுக்கு மேற்படியூரிலேயிருக்கும் வெங்கிட சுப்பய்யன் குமாறன் கோபாலய்யன் யெழுதி குடுத்த ஓடன்படிக்கெ யென்ன மெண்டால் மேற்படி கிறாம . . . . மான பங்கு 4 1/2 இல் தங்களுக்கு போக்கியம் வச்சுது பங்கு 1 1/4 க்கு நிலவ் விபறம் சின்ன சிதம்பறம் [பிள்ளை] [வாட்டாக்கு] வடக்கு விசுவநதாடக்க . . . [கால]டிக்கி தெற்க்கு சின்ன சங்கறம் பிள்ளை கரையடிக்கி கிளக்கு அழகபிள்ளை மஞ்சலக . . . கண்ணிக்கும் மேற்க்கு யினங்கெ யெலுகைக் . . . அப்பாச்சியன் பனையடிக்கி தெற்க்கு கீள்மேலான வடிவாயிக்காலுக்கு வடக்கு நாகபிள்ளை ஒத்தி யனுபோகம் பண்ணையடிக்கிறத் தென்வடலான வடி வாய்க்காலுக்கு மேற்க்கு யின்நங்கெ யெலுகைக்கி உள்ப்பட்ட பனையடி செய் 1 காரையடி கண்ணிக்கி வடபுறம் காரையடி கணிக்கி..... நாச்சியாற் தோப்புக்கு கிளக்கு யிந்த நாங்கெயெலுகைக்கி உள்ப்பட்ட நாச்சியாற் தோப்பு செய் 1 சின்னசிதம்பரம் பிள்ளை காரையடிக்கி தெற்க்கு சேஷாசலமயன் காரையடிக்கி வடக்கு ஆதி நாராயணபிள்ளை வடமலையபிள்ளை..... தென்வடலான வடி வாய்க்காலுக்கு மேற்க்கு யின் நங்கெ யெலுகைக்கி உள்பட்ட காரையடி செய் 1/2 தென் வடலான கண்ணிக்கி கெளக்கு சேஷாசலமயன் பாலத்தடிக்கி மேற்க்கு கீள்மேலான தோப்போறம் கண்ணிக்கி தெற்க்கு தென்புறம் கீள்மேலான கண்ணிக்கு வடக்கு யிந்நங்கெலுகை..... பாலத்தடி செய் 1/8 தோப்போறம் கண்ணிக்கி தெற்க்கு அருணாசலம் பிள்ளை வசந்தறாமயன் திருத்துக் கட்டளைக்கி கெளக்கு மேற்படியான் வசந்த றாமயன் திருத்துக்கு வடக்கு சின்ன சிதம்பறம் பிள்ளை வசந்தறாமயன் திருத்துக்கு மேற்க்கு யின் நங்கெ யெலுகைக்கி உள்ப்பட்ட வசந்தறாமய்யன் திருத் . . . ஆக செய் 3 3/4 1/8யிந்த மூனே முக்காலே யரைக்கால் செயிலும் பங்கு 1 1/4 ம் இதெ சேற்ந்த [தாகிய] வஸ்த்து மனையும் பத்துக்காடு புஞ்ச முதலான சகல சமுதாயம் தங்களிடத்தில் போக்கியமாக வச்சு நாளது தேதியில் அச்சு ஓலையில் போக்கியம் பத்திறம் யெளுதி குடுத்து அதின்பேரில் . . . யிந்த நானூத்தி யெளுவத்தி அஞ்சு ரூபாயியும் நான் றொக்கம் பத்தி கொண்ட படியினாலே மேற்படி நிலத்தில் தாதியவஸ்த்து மனையும் பத்துக் [காடுபுஞ்ச]யில் ஒரு புரியலும் நான் பக்கத்தில் போக்கியம் வச்சு யிருப்பதால் மேலெ வருஷத்தில் திருப்பி தங்கள் . . . . தாங்கள் வசம் விட்டு விடுவேனாகவும் போக்கியம் திருப்பும்

போது யிந்த சீட்டையும் வாங்கி கொள்ளுவேனாகவும் யிந்தபடிக்கி சமுதிச்சி யென் மனோ ராசியில் யெளுதிக் குடுத்த ஒடம்படிக்கெ தாதிய வாஷ்து மணெக்கி விபறம் பங்கு 1 1/4 பங்குக்கு மனை 1 1/4 லும் மனை 1 1/2 ... குடியிறுப்பு மணை1/2 பெரியனான குடியிறுப்பு மணை1/2 ... [மனையி ல் 5/8]ம் ஆக மனை 1 5/8 ம் யிந்தப்படி கோபாலய்யன் சம்மதி. சாட்சிகள், வெங்கிட சுப்பய்யன் குமாறன் றாம சுபாவியன் அரிவேன். வெங்கடாசலமய்யன் அரிவேன். னாறாயன் அய்யங்காற் அறவேன். அகிலாசமய [ராமயன்] அறிவேன். கிறாம கணக்கு சின்னியா பிள்ளை அறிவேன். யிசீட்டு யெழுதினது கணக்கு அப்பா வய்யன்.

16. போக்கிய முறி

(1847 ஏப்ரல் 4)

1847 வருஷம் யேப்பெறல் மாதம் 4 தேதிக்கு பறாபவ வருஷம் பங்குனி மாதம் 24 தேதி கொண்டயம் பேட்டையிலிருக்கும் செகனாதா றாயற் குமாறன் றாமசந்திற றாயறுக்கு மேற்படி யூற்லேயிறுக்கும் வெங்கிட்ட சுப்பய்யன் குமாறன் கோபாலய்யன் போக்கிய முரி யெளுதி குடுத்தபடி யென்னமெண்டால், மேற்படி கிறாமத்தில் யென்னுடைய சொந்தமான பங்கு 1 1/2யில் தங்களுக்கு போக்கியம் வச்சுது பங்கு 1 1/4 க்கு நிலம் விபறம் கவையடி செய் 1 1/8 பணையடி செய் 1 நாச்சியான் தோப்பு செய் 1 காரையடி செய் 1/2 பாலத்தடி செய் 1/8 வசந்த றாயன் திருத்து செய் 1/8 ஆக செய் 3 7/8 யிந்த முனே முக்காலெஅறைக்காலெ செயியும் இதெ சேர்ந்த தாதிய வாஸ்த்து மனை பத்துக் கட்டு கனம் முதலான யெப்பேற்ப்பட்ட சகல சமுதாயமும் தங்களிடத்தில் போக்கியமாக வச்சு அதின் பேரில் கடனாக வாங்கின கும்பினி அறும்பு ரூ 475 யிந்த நானூத்தி யெளுவத்தி அஞ்சு ரூபாயியும் நான் ரொக்கம் பத்தி கொண்ட படியினாலெ மேற்படி துகைக்கு மேற்படி குரித்த நஞ்சை புஞ்ச தாதிய வாஸ்த்து முதலான யெப்பேற்ப்பட்ட சகல சாமுதாயமும் ஊற் ஒப்பந்தம் தாங்களே குடுத்துக்கொண்டு அனுபிவிச்சு வறுவாற்றாகவும் யெந்த சித்திரை காலவதியில் நான் பணம் செலுத்து குறேநோ அப்போது முதலுக்குமுதலே பணம் வாங்கி கொண்டு சருக்கார் நிலுவை சுத்திகரிச்சு நிலம் விட்டு விடுவாற்றாகவும் மேற்படி நிலத்தில் நிலம் வெட்டுப்போட்டால் ஊர் ஒப்பந்தம் கணக்கு பிள்ளை அத்தாட்சிப் படிக்கு செலுத்தி வருவேனாகவும் யிந்தப்படிக்கி றாமசந்திற றாயனுக்கு கோபாலய்யன் போக்கிய முரி யெளுதி குடுத்தேன்.

17. ஈட்டுக் கடன் முறி

(1847 நவம்பர் 11)

(நாலணா ஓலை)

1847 வருஷம் நவம்பர் மாதம் 11 தேதிக்கி தமிள் பிலவங்க வருஷம் காற்த்திகை மாதம் 7 தேதி கொண்டயம் பேட்டயி லிருக்கும் மகா ரா ராஸ்ரீ ராமசந்திர ராயறவர்களுக்கு மேற்படியூறிலெ யிருக்கும் அனுமந்தய்யன் யெளுதிக்குடுத்த யீட்டுக் கடன் முரி யென்னமென்றால் யென்னுடைய சொந்தமான கொண்டயம் பேட்டயில் அலாதி நிலம் அப்பு வாத்தியார் அனுபோகத்துக்கு மேற்கு வளப்பாதைக்கி வடக்கு திருவொறுவநல்லூர் வாக்காலுக்கு தெற்கு கிறாம சமுதாயம் நாறணய்யன் அனுபோகத்துக் கிளக்கு யிதுக்குள்ப்பட்ட பிடாரி திருத்து நிலம் 1/2 கணக்கு சவாபதி பிள்ளை அனுபவத்துக்கு கிளக்கு பெருமாள் கோவில் நிலத்துக்கு மேற்கு வளிப்பாதக்கி தெர்க்கு காற வாக்காலுக்கு வடக்கு யிதுக்குள்பட்ட நிலம் 1/4 ஆக 3/4 லயும் தங்களுக்கு யீடு வயித்து யிதின்பேரில் கடனாக வாங்கினது ரூ 70 யிந்த யெளுவது ரூக்கிம் 100க்கு 1 வீதம் வட்டி கூட்டி யேரிய வட்டியும் வருகுற கீலக வருஷம் கா்ற்த்திகை மாதத்துக்குள் செலுத்தி யீட்டெ மூட்டு கொள்வேனாகவும் அப்படிக்கி செலுத்தாத வறயில் மேற்படி நிலத்தை மேற்படி துகைக்கி போக்கியமாயி அனுபவித்து கொள்வீறாகவும் யிந்தப்படி யெளுதிக் குடுத்த யீட்டுக் கடன் முரி அனுமந்தய்யன் சம்மதி யிந்த யீட்டு யெளுதினது கொண்டயம் பேட்டெ சுப்பாத்தீக்ஷ்தற் குமாறன் குப்பாதீக்ஷதன் யிதுக்கு சாட்சி . . . . கறியமாணிக்கத்தில் யிறுக்கும் . . . . றெங்க சோசியற் குமாறன் றாமய்யன் அறிவேன்.

விறோதிருதி வருஷம் ஆடி மாதம் 1 தேதி வட்டிக்காக செல்லு கூட்டுவட்டி ரூ 8 யிந்த யெட்டு ரூபாயும் செல்லு ரூ 8.

சாதாறண வருஷம் வையாசி மாதம் 5 தேதி செல்லு ரூ5.

பரிதாபி வருஷம் ஆனி மாதம் 1 தேதி செல்லு ரூ 8.

றாக்ஷஸ வருஷம் ஆனி மாதம் 1 தேதி அசலுக்கு செல்லு ரூ யிறுவத்தஞ்சி.

அனுமந்தய்யன்.

1847 வருஷத்திய நம்பர் 693 லாலுகெடி தாலுகா கொண்டையம பேட்டையிலிருக்கும் வெங்கிட்ட நரசய்யர் யென்கிற வெங்கிட்ட றாயர் குமாரன் அனுமந்தய்யருக்கு நஞ்சை நிலத்தின் பேரில் ரூ 100 க்கு ஒத்தி பத்திரத்துக்கு கால் ரூபாய் விலையுள்ள ஓலை விற்காலச்சுது 1847 வருஷம் மே மாதம் 31 தேதி. வீராசாமி [முதலி] ஷ்டாம்பு தாறொகர்.

றாக்ஷஸ வருஷம் ஆனி மாதம் 8 தேதி பத்திரத்தின் அசலுக்கு செல்லு ரூ 45. யிந்த னாற்ப்பஞ்சி ரூபாயும் செல்லு அனுமந்தய்யன்.

யிந்த பத்திரித்து அசல் வட்டியுள்பட துகையை(யும்) ராக்ஷஸ வருஷம் காற்திகை மாதம் 1 தேதி அனுமந்தஅய்யன் யெடத்தில் நான் றொக்கம் பத்திக்கொண்டு பத்திறத்தை வாபுசு செய்ய லாச்சுது. ரங்கநாதராவ்*

---

* மோடி யெழுத்தில்.

18. மனை சுத்தக் கிரய சாசனம்

(1848 ஜனவரி 1)

(ஒரு ரூபாய் ஓலை)

ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகந சகாப்தம் 1775 பிலவங்க வருஷம் மார்கழி மாதம் 19 தேதிக்கி சரியான 1848 வருஷம் ஜெனவரி மாதம் 1 தேதி லாலுகெடி தாலுகா கொண்டயம்பேட்டை யிலிருக்கும் மகாராரா ஸ்ரீ பாப்புறாயறவற்களுக்கு மேற்படி யூரிலிருக்கும் மறாமத்து கோபாலய்யற் ஸ்விகாற புத்திறன் அசுவத்த னாறாயணய்யன் மனை சுத்த கிறைய சாசனம் பண்ணி குடுத்தபடி யென்னமென்றால் மேற்படி கொண்டயம்பேட்டை அக்கிறாகாறம் கெணசங்கியாபாகம் மனை 58ல் தென்சிறகில் தங்கள் மனைக்கி கிழக்கு காவற்காறன் குடியிருப்பு மனைக்கி சீனிவாசய்யங்காற் மனைக்கி கிழக்கு வீதிக்கி தெற்கு இன்னாங்கெல்கைக்குள்பட்ட யென் சொந்தமான மனைகளுக்கு கீள்மேலடி

45ம் தென்வடல் வாயிக்காலுக்கு தென்பறம்.... துண்டுள்பட அடுத்தமனை ஒப்பந்தம் உள்ள வால் வீச்சும் மேற்படி மனையிலிருக்குற செட்டி மச்சு பல விருக்ஷமுள்பட உபயானு சம்மத மாயி கிறையம் நிச்சியித்தது கும்பினி சிலாவணி ரூ 300 இந்த முன்னூரு ரூபாயிக்கும் நாளது தேதி தங்களுக்கு மேற்படி மனையை னான் சுத்தகிறைய சாசனம் பண்ணிகுடுத்து மேற்படி துகை னான் பத்தி கொண்டபடியனாலெ மேற்படி மனையுமதிலுள்ள கெட்டி மெத்தை வீடு முதலான ஜெலதருபாஷாண நிதிநிக்ஷேப அஷ்டபோக தேச சுவாமிங்களுடன் தானாதி வினிமய விக்கிற யங்களுக்கு யோக்கியமாயி ஆசந்தறாக்க ஸ்தாயியாயி புத்திற பவுத்திற பாறம்பரியமாயி ஆண்டனுபவித்துகொள்ளுவாறாகவும் மேற்படி மனைக்கு [முதலுக்கு?] தீற்வான 1832 வருஷம் அக்டோபர் மாதம் 6 தேதியில் [பிறந்த] சுத்தகிறய சாசனம் 1 மேற்படி மாதம் 11 தேதியில் பிறந்த சுத்தகிறய சாசனம் 1 ஆக 2 ஆதிறனகளையும் இந்த சாசனத்துடன் தங்களிடத்தில் குடுக்கலானேன். மேற்படி துகை ரூ 300ம் னான் சரிவற பத்திகொண்டதற்கு இதுவே [திற்கை] . . . . சுத்தகிறைய சாசனமாகவும் கட்டிகொள்ளுவிற்காகவும் யிந்தப்படி யென் மனோராசியில் யெழுதிச் குடுத்த சுத்தகிறைய சாசனம் அசுவத்தனாராயணய்யன் சம்மதி. சாட்சிகள், மேற்படி யூரர் வெங்கிடசுப்பயன் குமாறன் றாமசுவாமியன் அறிவேன். வெங்கிட்டறாயற் குமாறன் திருமலறாவு அரிவேன். மேற்படியான் சௌதபித வெங்கய்யன் அருவேன். இந்த சாசனம் யெழுதினது கொண்டயம் பேட்டை சட்டநாதனய்யன். மேல்படி ஊர் னாறாயண அய்யங்காற் அறிவேன்.

1847 வருஷத்திய நம்பர் 396 ஸ்ரீ ரெங்கம் ராமகிஷ்ணய்யங்கார் அரிவேன் திருவானைக்காவலுலே யிறுக்கும் னாறாயண சாஸ்திரி அரிவேன்.

லாலுகெடி தாலுகா கொண்டயம் பேட்டையிருக்கும் மறாமத்து கோபாலய்யன் ஸ்ரீகாரபுத்தர அசுவத்தனாறாயணய்யனுக்கு கெட்டிமச்சு வீடு மனை ரூ 300க்கு சுத்தக்கிறைய சாசனத்துக்கு மேற்படியார் மனுஷன் மேற்படி யூரிலிருக்குப் அழகிரி னாயக்கன் மகன் நல்லப்பனாயக்கன் வசம் ஒரு ரூபாய் விலையுள்ள ஓலை விற்க்கலாச்சுது. 1847 வருஷம் டிசம்பர் மாதம் 30 தேதி. வீராசாமி [முதலி] ஷ்டாம்பு தறொகர்.

19. ஈட்டுக்கடன் பத்திரம்

(1848 ஏப்ரல் 1)

(ஒரு ரூபாய் ஓலை)

1848 வருஷம் யேப்பரெல் மாதம் 1 தேதிக்கு தமுள் பிலவங்க வருஷம் பங்குனி மாதம் 21 தேதி திருசிறபுறம் கோட்டையில் யிறுக்கும் கோவளம் டங்கு சாலை வெங்கிடசுப்பய்யக் குமார வெங்கிட சேஷய்யர்க்கு லாலுகெடித் தாலுகா ஆங்கரை கிறாமத்தில் யிறுக்கும் கோதண்ட றாமய்யன் புத்தரன் யெக்கறாமய்யன் நஞ்சை புஞ்சை நிலத்தின் பேரில் யீட்டு கடன் பத்தறம் யெழுதி குடுத்தபடி யென்ன மென்றால் மேற்படி தாலுகா மாந்துரை கிறாம கெண சங்கா பாகம் பங்கு 36 ல் யென் சொந்தமான பங்கு 18 ல் தங்களுக்கு யீடாக வச்சது பங்கு 4 யிந்த னாலு பங்கும் பேரில் கடனாக வாங்கினது கு. ரூ 500 யிந்த அஞ்சூறு றுபாயும் தங்களிடத்தில் நான் ரொக்கம் பத்திகொண்ட படியனாலே மேற்படி றாபாயிக்கு நாளது தேதி முதல் மாதம் 1 க்கு னூத்துக்கு ஒரு றாபாயி வீதம் வட்டி கூட்டி கூட்டிய வட்டி துகையெ மூனுமாசத்துக்கு ஒறுதடவையாயி செலுத்தி கொண்டு வறுகுரதும் தவிர அசல் றுபாயி அஞ்சூறும் ஸாதாரண வருஷம் ஆடி மாசம் 30 தேதி வரையில் செலுத்திவிச்சு யிந்த பத்திரத்தை வாங்கி கொள்ளுவேனாகவும் யிந்த பத்திரத்துக்கு அசலுக்கு செலுத்திவிச்சால் யிந்த பத்திறத்தில் செல்லு வக்குரதெ தவிர ரசீது கொண்டு வந்தால் ஒப்பு கொள்ள வேண்டிய தில்லை. யிந்தபடிக்கி சம்மதிச்சு டங்கு சாலை வெங்கிட சேஷய்யறுக்கு யெக்க றாமய்யன் நஞ்செபுஞ்செ நிலத்தின் பேரில் யீட்டு கடன் பத்தறம் யெழுதிகுடுத்தேன் ஆயிற றுபாயிக்கு ஒறு பத்தரமாயி ஆப்படாததுனால் நாளது தேதியில் ரெண்டு பத்தரமாயி எழுதி குடுத்தேன், யெக்கறாமய்யன் சம்மதி. சாட்சியள்: தின்னியம் னாறாயண சாஸ்திரியள் அறிவேன். செய்யாமங்கலம் றாசூறு மாதுருபூதய்யன் அரிவேன். யிந்த பத்தறம் யெழுதினது மாந்துரை கணக்கு றாமய்யன்.

1848 வருஷத்தி நம்பர் 69 லாலுகுடி தாலுகா ஆங்கரையிலிருக்கு கோதண்ட றாமய்யர் குமாரர் யெக்கிய ராமய்யருக்கு நஞ்சை நிலத்தின் பேறில் ரூ 500க்கு யீட்டுக்கடன் பத்திரத்துக்கு மேற்படியார் மனுஷன் மேற்படி யூரிலிருக்கு கோபாலகிஷ்ணய்யர் குமாரன் அப்பய்யர் வசம் ஒருரூபாய் விலையுள்ள ஓலை விற்க்கலாச்சுது. 1848 வருஷம் யேப்பிறல் மாதம் 6 தேதி. வீராசாமிமுதலி, ஷ்டாம்பு தாறொகர்.

யிந்த பத்துள் அசல் பிறமாதி வருஷம் ஆடி மாதம் 22 க்கு [துகை] அசலுக்கு ரூ 500 வட்டிக்கு வாலு ரூ 319 ஆக அசலும் வட்டியும் [துகை] ரூ 819 ... யிந்த ரூ 819 க்கு ராமசந்திறாயர் செல்லு ரூ 793 5/8 யெக்க ராமயன் செலுத்திவச்சது ரூ25 3/8 ஆக 819. யிந்த பத்தறம் செல்லுவச்சு எழுத்து கணக்கு ராமய்யன்.

20. கறாற் நமா சீட்டு

(1848 நவம்பர் 19)

கீலக வருஷம் காற்த்திகை மாதம் 6 தேதி கொண்டயம் பேட்டையிலிருக்கும் செகநாதறாயற் குமாரன் ராமசந்திறறாயறுக்கு மேற்படி யூறிலிருக்கும் கோபாலய்யன் தம்பி குமாறன் சுப்பறாயற் யெழுதி குடுத்த கறாற் நமா சீட்டு யென்ன மென்றால் மேற்படி யூறில் தங்களுக்கு போக்கியம் வச்சு யிருக்குற பங்கு 1 1/2. யில் ம . . . தெருவும் . . . யிலுள்ள (பங்கு) அறை பள்ளதெரு பிஞ்சையில் பங்குக்கு . . . யிந்த வருஷத்துக்கு . . . (குடுத்து)..

. . . குடுத்துபோட்டு நடமுதல் 59 பசலிக்கி தங்களிடத்தில் விட்டுவிடுவேநாகவும் கோபால்ய்யன் தம்பி குமாறன் சுப்பய்யன் . . . . சாட்சியள், அய்யங்கற் அறிவேன். வியாசுவய்யன் அறிவேன்.

21. ஈட்டு நில எல்லை*

(1850 ஜுலை 14)

1850 வருஷம் சூலாயி மாதம் 14 தேதிக்கு தமுழ் சாதாறண வருஷம் ஆடி மாதம் 1 தேதி லாலுகெடி தாலுகா கொண்டயம் பேட்டையிலிறுக்கும் மகாறா ஸ்ரீ

பாபுறாயர் அவர்கள் குமாரர் லெட்சுமணறாயர் அவர்களுக்கு மேற்படி தாலுகா அகங்கரையிலிருக்கும் கோதண்டறாமயர் குமாரர் பெரிய வெங்கிட சுப்பய்யனாகிய றாசதானிய்யர் நாளது தேதியில் ரூ 1500க்கு அச்சு கடுதாசுல் யெழுதிகுடுத்த பத்திரம் 2ல் யீடுகண்ட பங்கு 4க்கு நெலம் ந . . . கல்கல் யெலுகை விபர கணக்கு குடி ஆன [உள்கட] கெடளை கொமாலகுடி[ணய்யன்] பட்டவிர்த்தி சிவறாமய்ய பட்டவிர்த்தி [சப்த] ரிழி அய்யன் அன்னதான வேங்கிட சுப்பய்யன் வயலுக்கு கெழக்கு மேற்படி பெரிய வெங்கிட சுப்பய்யன் வயலுக்கு மேற்க்கு சிவறாமய்யன் அனுபோகம் பட்டவிர்த்திக்கு தெற்க்கு அய்யன் வாக்கால் கரைக்கு வடக்கு குடிஆளச்சுகட்டு கட்டளை காணி 2 குழி 44 கதிரிடை கடளை குழி.. பெரியவெங்கிட சுப்பய்யன் வயலுக்கு மேற்க்கு மேற்படியார் வயலுக்கு கெழக்கு மேற்படி பெரியவெங்கிட சுப்பய்யன் வயலுக்கு தெற்க்கு பனையடி வாய்க்காலுக்கு வடக்கு குழி 87 1/2 கீழ்ப்படுகை பள்ளம் கட்டளை துண்டுப் படுகை . . . சப்த்தரிழியன் அன்னதான வெங்கிட சுப்பயன் வயலுக்கு கெழக்கு சிவறாமய்யன் கீழ்ப்படுகைக்கு மேற்க்கு மாந்துரைக்கு தெற்க்கு பனையடி வாக்காலுக்கு வடக்கு காணி 1 குழி 77 5/8 கீழ்ப்படுகை கட்டளை மேற்படி பெரிய வெங்கிட சுப்பய்யன் வயலுக்கு கெழக்கு சப்த்தரிழிய்யன் அன்னதான வெங்கிட சுப்பய்யன்வயலுக்கு மேற்க்கு பெரிபவெங்கிட சுப்பய்யன் . . . பள்ளம் கட்டளைக்கு தெற்க்கு வயலுக்கு தெற்க்கு பனையடிவாக்காலுக்கு வடக்கு காணி 4 குழி.. சம்பார் மேட்டு கட்டளை.. அப்பாவய்யன் வயலுக்கு கெழக்கு சீதாறாமய்யன் வயலுக்கு மேற்கு [ப்பிராமணகுடி வாக்காலுக்கு தெற்கு சவுக்குயடிவாக்காலுக்கு] வடக்கு காணி 1 குழி 5 . . . பனையடி கட்டளை நடுவாக்காலுக்கு தெற்கு வடி வாக்காலுக்கு வடக்கு வயித்திய்யன் வயலுக்கு மேற்கு சப்த்திரிழிய்யன் அன்னதான வெங்கிட சுப்பய்யன் வயலுக்கு கெழக்கு காணி 1 குழி 8 . . . அரசடி கட்டளை . . . நெலியடி உள்ப்பட்ட சிவறாமய்யன் அரசடி வயலுக்கு கெழக்கு சப்தரிழி அய்யன் அன்னதான வேங்கிடி சுப்பயன் நெலியடிக்கு மேர்க்கு சப்தரிழிய்யன் வெங்கிடசுப்பயன் லிங்கதடி கட்டளைக்கு வடக்கு சவுக்கயடி வாக்காலுக்கு தெர்க்கு காணி 2 குழி 31 . . . லிங்கத்தடி கட்டளை பிலாத்துக்கு மேல்புரம் சீதாறாமய்யன் லிங்கத்தடிக்கு கெழக்கு சிவறாமய்யன் சப்தரிழிய்யன் அன்னதான வேங்கிட சுப்பய்யன் நெல்லியடி கட்டளைக்கு வடக்கு மேட்டுவயல் அம்மானைக்கி போகுற வாக்காலுக்கு தெர்க்கு காணி [6] குழி 92 3/8 மேட்டு பரபான கட்டளை யெல்லவா செய் முதியூர் யெல்லை வயலுக்கு கெழக்கு மேற்படியூர் வாக்காலுக்கு வடக்கு சப்தரிழி அய்யன் அன்னதான வெங்கிட சுப்பய்யன் வயலுக்கு மேர்க்கு வடிவாக்காலுக்கு தெற்க்கு குழி 78 [தேரர் செய்] கட்டளை முளை கரும்பு போட்டு யிருந்த நிலம் சப்பதரிழிய்யர் அன்னதான வெங்கிட சுப்பய்யர் வயலுக்கு கெழக்கு மேற்படியார் வயலுக்கு மேர்க்கு செவந்தி னாதபுறம் வயலுக்கு வடக்கு கருப்பங்கடை வாக்காலுக்கு தெர்க்கு காணி 3 குழி 87 ...

பெரிய வெங்கிட சுப்பய்யனாகிய றாசதானிய்யன் சம்மதி.

கொண்டயம் பேட்டையிலிறுக்கும் லெட்சுமணறாயர் அவர்களுக்கு அகங்கரை பெரிய வெங்கிட சுப்பய்யனாகிய றாசதானிய்யன் அச்சு கடுதாசு பத்திரம் 2 க்கு ஈடுவச்ச பங்கு 4க்கு நெலம் யெலுகை.

மேற்படி [தேரர் செய்] கட்டளை நாவலடி சிவறாமய்யன் வயலுக்கு கிழக்கு மேற்படி சிவறாமய்யன் வயலுக்கு மேற்க்கு சப்தரிழிய்யன் அன்னதான வெங்கிட சுப்பய்யன் வயலுக்கு வடக்கு கருப்பங்கடை வாக்காலுக்கு தெற்க்கு சாலைய்டி கட்டளை உள்பட காணி 5 குழி 74 5/8 நாவலடி கட்டளை சிவறாயன் நாவலடி நத்தத்துக்கு போகுற [காடி]க்கு மேர்க்கு றாசாங்கம்பன் இடத்தில் நான் சாசனம் வாங்கியிருக்குற நாவடிக்கு கெழக்கு றாமாதீட்சதர் ... யென் பொறுப்புடையதுக்கு தெர்க்கு வயித்திய்யன் சாலையடிக்கு வடக்கு காணி 1 குழி 6 1/4 யேழான் செய் கட்டளை பெரிய வெங்கிட சுப்பய்யன் மேற்படி கட்டளைக்கு கெழக்கு சிவறாமய்யன் வயலுக்கு மேர்க்கு நெல்லியடி வடி வாக்காலுக்கு வடக்கு சவுக்கடி வாக்காலுக்கு தெர்க்கு நெல்லியடி கட்டளை உள்பட காணி 2 குழி 16 1/4 மூலை சாலையடி கட்டளை செவந்தினாதபுரம் வயலுக்கு கெழக்கு சேஷ சமுத்திரம் வயவுக்கு மேர்க்கு சப்தரிழிய்யன் அன்னதான வெங்கிட சுப்பய்யன் வயலுக்கு தெர்க்கு சேஷ சமுத்திரம் வாக்காலுக்கு வடக்கு காணி 1 குழி 85 5/8ஆக நஞ்சை கட்டளை 14க்கு காணி 28 குழி 90. பெரிய வெங்கிடசுப்பய்யனாகிய றாசதானிய்யன் சம்மதி. சாட்சி: கொண்டயம் பேட்டை சுப்பாதிக்ஷதற் குமாறன் . . யா திக்ஷ னரிவேன். பம்பறம் சுத்தி கோபால கிஷ்ணய்யன் புத்திரன் அறிவேன். மேற்படி பம்பறம் சுத்தி கிறாம கணக்கு வெங்குவயன் எழுத்து.

*இரண்டு ஓலைகளில் எழுதப்பட்டுள்ளது.

22. நில போக்கியச் சீட்டு

(1850 ஜூலை 23)

(நாலணா ஓலை)

ஸாதாரண வருஷம் ஆடி மாதம் 9 தேதி ஆங்கரையிலிருக்கும் றாமா அவதானியன் புத்தரன் முத்துறாம அவதாநியளுக்கு மேற்படி ஊரில் இறுக்கும் கோதண்ட றாமய்யன் புத்திரன் யெக்கறாமய்யன் நஞ்சை நிலம் போக்கிய சீட்டு யெழுதி குடுத்தபடி யென்ன மென்றால் இதி நாளது னாள் யென்னுடைய அவசர நிமித்தமாக தம்முடத்தில் போக்கியமாயி வச்சது மாந்துரை கிறாமத்தில் யென் சொந்தமான நஞ்சை நிலம் வண்ணாற் செய் கட்டளையில் வெங்கிடசுப்பயன்

குமாரன் அய்யா வயன் நிலத்துக்கு கிளக்கு யென்னுடைய அரட்டான் கட்டளைக்கு தெர்க்கு மேற்படி அய்யாவயன் நிலத்துக்கு மேர்க்கு கீள்மேலான வாக்காலுக்கு வடக்கு இதுனாங் கல்லைக்கு உள்பட்ட நஞ்சை காணி 1 குழி 10 யிந்த ஒரு காணி குளி பத்தயும் ஒம்முடத்தில் போக்கியத்துக்கு விட்டு அதின் பேரில் வாங்கினது கு. ரூ 105 யிந்த னூதி அஞ்சு றூபாயும் நாம் ரொக்கம் பத்திகொண்டபடியினாலெ மேல் யெழுதிய நஞ்சை காணி 1 குழி 10ம்த் தாம் இறுபூ சாகுபடி பண்ணி அதில் கண்ட பலநெ அனுபிவிச்சு கொண்டு ச்றுக்கார் தீர்வை ரூ 6 7/8பணம் 2ம் சுவந்தறம் முதலானது குடுத்து கொண்டு அனுபிவிப்பாறாகவும் நாம் யெந்த வருஷம் சித்தரை காலாவதியில் மேல் எழுதிய முதல் றூபாயி னூத்தி அஞ்சும் குடுக்குரோநோ அந்த வருஷம் சித்தரை காலாவதியில் வாங்கி கொண்டு சறுக்கார் நிலுவையுந் சுத்திகரிச்சு நிலத்தை விட்டு விடுவானாகவும் இந்தப்படிக்கு சம்மதிச்சு முத்துறாம அவதாநியளுக்கு யெக்கறாமய்யன் நஞ்செ நிலம் போக்கிய சீட்டு யெழுதி குடுத்தேன். ஓம். யெக்கறாமய்யன். சாட்சியள்; றாமாசாஸ்திரியளறிவேன். அய்யாவய்யனறிவேன். ஆங்கரை கணக்கு காசியன் அரிவேன். இந்த சீட்டு யெழுதினது மாந்துரை கணக்கு றாமயன்.

1850 வருஷத்திய நம்பர் 849. லாலுகெடி தாலூகா மாந்துரை கிறாமத்து மகா [சனம்] கோதண்ட றாமய்யன் குமாரன் யெக்கிய றாமய்யனுக்கு ரூ 105 க்கு நஞ்சை நிலத்தின் பேரில் ஈட்டு கடன் பத்திரத்துக்காக கால் றூபாயி விலையுள்ள ஓலை மேற்படியாற் காரியம் அமுற்தமய்யன் குமாரன் அய்யாவய்யன் வசம் மேற்படி தாலூகா கிறாமத்தில் விற்க்கலாச்சுது. 1850 ம் வருஷம் சூலையி மாதம் 16 தேதி மு ராமாவதானிள் ஸம்மதி.

பிறமாதிசா வருஷம் ஆவணி மாதம் 29 தேதி ராமசத்திரறாயர் . . . பத்தி கொண்டது ரூ 89 1/2 யெங்காராம அய்யற் யெனக்கு சீட்டு யெளிதி குடுத்த பா. . தில் செல்லு ரூ 5 1/2 ஆக ரூ 105ம் சாடவானென் பத்திகொண்டேன்.

23. ஈட்டு மேல் கடன்முறி

(1850 செப்டம்பர் 11)

சாதாறண வருஷம் ஆவணி மாதம் 28 தேதி ஆங்கரையிலெ யிறுக்கும் கோதண்டறாமய்யன் குமாறன் யெக்கறாமய்யன் நெரிஞ்சிலக் குடியிலெ யிறுக்கும் சுப்பாபிள்ளை புத்திறன் அய்யாபிள்ளைக்கி ஈட்டுமேல் கடன்முறி யெழுதி குடுத்தபடி யென்ன மெண்டால் நமக்கு சொந்தமான மாந்துரை கிறாமத்திலெ

யிறுக்கும் சங்கிறதேவன் வாக்காலுக்கு வடபுறத்தில் நமக்கு யிறுக்கப்பட்ட தென்னமறம் முழுவதையும் தனிடத்தில் ஈடாக வச்சு யிதின் பேரில் நாளது தேதியில் கடன் வாங்கினது கும்பினி ரூ 50. யிந்த அன்பது றூபாயிக்கிம் நாளது மாதம் நாளது தேதி முதல் னூத்துக்கு ஒரு ரூபாயி வீதம் வட்டி கூட்டி யேறின வட்டியும் முதல் றூபாயும் இது நடுத்த மாசி மாதம் 30 தேதி றொக்கத்தில் செலுத்திவிப்பேனாகவும் யிந்தப்படி சம்மதிச்சு யெக்க றாமய்யன் அய்யப்பிள்ளைக்கி ஈட்டு மேல் கடன்முறி யெழுதி குடுத்தேன், யெக்கறாமய்யர் சம்மதி. ஆங்கறை முத்து வய்யனறிவேன். மேற்படி ஊர் வெங்கட்டறாமய்யன் அறிவேன். இந்த சீட்டு யெழுதினது அப்பா வய்யன்.

24. நிலம் ஈட்டுக்கடன் பத்திரம்

(1850 அக்டோபர் 26)

1850 வருஷம் அக்டோபர் மாதம் 26 தேதி சதாறண வருஷம் அற்ப்பிசி மாதம் 12 தேதி கொண்டயம்பேட்டையிலிருக்கும் வெங்கட சுப்பய்யன் குமாரன் றாமசுவாமிய்யன் உளத்தாற் மேற்படி யூறில் றாம கிஷ்ட்டான சாத்தியாற் குமாரன் அறதாங்கி றெங்கா சாத்திறியாருக்கு யெளுதிகுடுத்த நஞ்சை நிலம் யீட்டு கடன் பத்திறம் யென்ன மென்றால் மேற்படி கிறாமத்தில் யென் பங்கை சேற்ந்த வறதய்யங்காற் கட்டளைக்கி கிளக்கு சபாபதி பிள்ளை அனுபோகம் கட்டளைக்கி தெருக்கு குப்பா சாஷ்திரியள் மூக்க பிள்ளை கட்டளைக்கி மேருக்கு வாலான் பள்ளம் கட்டளையி கண்ணிகி வடக்கு யிந்த நான்கு யெலுகையி உள்ப்பட்ட கட்டளை செய் 3/8 யிந்த காலே அறக்கால் செயிம் தம்மிடத்தில் யீடுகடன் வயித்து யிதின் பேறில் வாங்கினது கும்பினி சிலாமணி ரூ 26 யிந்த யிருவத்தி ஆரு ரூபாயிக்கும் மாதம் 1க்கு 100 க்கு ரூ 1 வீதம் வட்டி கூட்டி யேறின வட்டியும் அசலும் யிதுநடுத்த சித்திறை மாதம் 30 தேதிகுள்ளாக செலுத்திவிச்சு யிந்த சீட்டு வாங்கி கொள்ளுவேநாகவும் யிந்த கெடு தப்பிநால் கெடுவான ஒத்தி முதல் வட்டிக்கும் முதலுக்கும் மேலளுதிய நிலத்தை தாமே வெட்டி சாகுபடி செயிது போக்கியம்மாயி அனுப்பிவிச்சுகொண்டு அதுகுள்ள சர்க்கார்க்கு தீருவை [சாறாமலு] பலசுவந்திறம் யெப்பேற் பட்டதும் தாமே குடுத்துக் கொள்ளுகுறதுமந்தவிற மேற்படி நிலத்துக்கு வெட்டு போட்ட பணம் கணக்குபிள்ளை அத்தாட்சி படிக்கு உள்ள முளுவதும் வாங்கிகொண்டு சர்க்காற் நிலுவை சுத்திகிறச்சு நிலம் விட்டுவிடுவீறாகவும் அப்பால் யெந்த கலாவதியில் [முதலும்] வட்டி துகையும் நிலம் விட்டுவிடுவீறாகவும் யிந்தப்படி றாமசுவாமியான் உள்ளத்தாற் றெங்கா சாத்தியாருக்கு நஞ்சை நிலம் யீட்டு கடன் பத்திரம் யெளுதி குடுத்தோன், றாமசுவாமிய்யன் சம்மதி சாட்சியள்

குப்பாதீக்ஷனரிவேன். கிருஷ்ண ராவ். னாறாயண அய்யங்கார் அறிவேன். முத்துச்சாமி பிள்ளை அறிவேன். யிந்த சீட்டு யெளுதினது திம்மறாய . . . நறசய்யா அறிவேன். வியாசு வய்யன் அறிவேன். ரெங்கயென் அறிவேன்.

கொறுதன வருஷம் சித்திரை மாதம் 14 தேதி மேற்படி பத்திறத்து அசல் வட்டி உள்பட்ட ரூ 27 1/2 ரூ செல்லு 27 1/2 குப்பாசாஸ்திரி.

25. இசாறா ரசீது

(1851 பெப்ரவரி 27)

சாதாரண வருஷம் மாசி மாதம் 18 தேதி ரகுனாதபுத்திலிருக்கும் பரசுராம மேஸ்திரிக்கு மேற்படி யூரிலிருக்கும் தாயி றாமசாமி எழுதிக் குடுக்கும் றசீது என்னமென்றால் பாப்புறாயர் தோட்டம் தோப்பு யிசாறா குறொதி வருஷம் முதல் பறாபவ வருஷம் வரைக்கு வருஷம் 1க்கு றூ 3/4 ஆக றூ 2 1/4 க்கு மேற்படியான் வசம் றூ 2 5/8 புறொகித பங்காசாலி ஆரிமுத்து வசம் நூ 5 1/4ஆக றூ 7 7/8 யிந்த றூ பா எழெமுக்காலெ அரிக்காலும் செல்லுத்து யிருக்குது யிதுவே றசீதா கட்டி கொள்ளவும், யிந்த கீரல் றாமசாமி.

26. இசாறாப் பட்டயம்*

(1851 ஏப்ரல் 19)

J. Bird Collr

1851 வருஷம் ஏப்பரெல் மாதம் 19 தேதி திருச்சினாப்பள்ளி சுபா வகையறா கலெகட்டறாகிய மகா ரா ரா ஸ்ரீ மேஸ்த்தர் ஜான் பறட்டு துறை யவர்கள் லாலுகெடி தாலுகா சுபா மாகாணம் நம்பர் 28 நெரிஞ்சல் குடி கிறாமத்து

மிறாசுக்குடி பெரிய வெங்கிட சுப்பையனுக்கு யெழுதிக் குடுத்த இசாறாப் பட்டையம் யென்ன மின்றால்: நாளது 1260 ம் பசலிக்கு ஆடி முதல் ஆநி முடிய கிறாமத்தில் நீ சாகுபடி செயிதனுபிவிக்கப்பட்ட நிலத்துக்கு தறத்து பிறகாறம் யேர்ப்பாடா யிருக்குற தீர்வை இதுநடியில் விபறம் கண்டிருக்கிறது* . . . .

ஆக நஞ்சை புஞ்சை உள்பட காணி 74 குழி 1 3/8க்கு தீர்வை ரூ 310 ப. 2 1/4 . . . . க்கு ரூ 361 3/4 . . . .

இந்த துகைக்கு நீ இசாறா ஒப்பு கொண்டு யிறுக்குற படியினாலெ மேலே யெழுதிய நிலங்களில் வறுமானம் வெலைவாசியள் மயித்த யெவிதத்தினும் வரப்பட்ட நய நழ்ட்டங்கள் சருக்காருக்கு சம்மந்தமில்லாமல் நீய்யே பாத்தியமா யிருக்குறதும் தவிற மேற்படி துகையை யிதுநடியில் கண்டு யிறுக்குற கெஸ்திப்பந்தி பிறகாறம் பணம் செலுத்திவிச்சு ரசீதுகெளை வாங்கி கட்டி கொள்ளவும்.

நவம்பர் மாதம்	ரூ	54 1/4 1/16
டிசம்பர்		"
செனவரி		"
பிப்ரவரி		"
மார்ச்சு		"
யேப்பெரெல்		"
மேன்	ரூ	30 ....
ஆக	ரூ	360 ...

இந்த கெஸ்திப்பந்தி பிரகாரம் பணம் செலுத்திவிக்காமலட்டி பண்ணினால் [தானா நிகிலிசன்] ... உள்ள வட்டியும் அதெ வசூல் செயிகுறதற்காகப் பிடிக்கப்பட்ட சிலவும் சேத்து.. ஒன் தன ரணத்துக்குப் பாத்தியஸ்தர்களுக்காயி ஒன் சொந்த ஆபாதயினாலே ரொக்கத்தில் செலுத்தி விக்கவும்.

கிறாம கர்ணன் னாட்டு கர்ணன் வறுமானங்களை சாடா வாயி குடுத்து ரசீது வாங்கி கட்டி கொள்ளுகுறதும் தவிற மயித்த தொழுலாளிகளுடைய சுவந்திரங்களை மாமூல் வழக்கப்படி குடுத்து கொண்டு வரவும்.

---

* இரு ஓலைகளில் எழுதப்பட்டுள்ளது. முதல் ஓலையில் முதற்பகுதியும் இரண்டாம் ஓலையில் நடுவில் ஓரிடத்திலும் ஒருவரின் கைப்படவும் மற்ற இடங்களில் இன்னொருவர் கைப்படவும் எழுதப்பட்டுள்ளது.

இதற்குப் பின்னால் நிலவிவரங்கள் உள்ள பகுதி தெளிவாக இல்லை.

27. ஈட்டு மேல் கடன் பத்திரம்

(1851 ஆகஸ்டு 6)

(ஒரு ரூபாய் ஓலை)

விரோதிகிருது வருஷம் ஆடி மாதம் 23 தேதி அகங்கரை யிலிருக்கும் ரெங்கசாயி அய்யன் புத்திரன் பெரிய அனந்த கிறுஷ்ணய்யனுக்கு மேற்படி ஊரிலிருக்கும் கோதண்டறாமய்யன் புத்திரன் பெரிய வெங்கிட சுப்பய்யனாகிய றாசதானிய்யன் ஈட்டுமேல் கடன் பத்திரம் எழுதி குடுத்தபடி யென்ன மின்றால் நெரிஞ்சிலகுடி கிறாமம் கெணசங்கை பாகம் பங்கு 64யில் யென் சொந்தமான பங்கு 17ல் தம்மிடத்தில் ஈடாக வச்சது பங்கு 2 1/8 இந்த ரெண்டே அரைக்கால் பங்கும் அதை சேந்த நஞ்சை புஞ்சை வகையறா நிலங்களும் ஈடாக வச்சு யிதின் பேரில் கடனாக வாங்கினது கும்பினி ரூ 500 யிந்த அஞ்னூறு ரூபாயும் நான் றொக்கம் பத்தி கொண்ட படியினாலே மேற்படி ரூபாய்க்கு வட்டி இம்மாசம் முதல் மாசம் ஒன்றுக்கு னூத்துக்கு முக்கால் ரூபாயி வீதம் வட்டி கூட்டி கூடிய வட்டியும் மொதலும் உடையான் வேண்டும்போதே செலுத்திவிச்சு யிந்த பத்திரத்தை வாங்கி கொள்வேனாகவும் இந்தப்படிக்கு சம்மதிச்சு பெரிய அனந்தகிறுஷ்ணய்யனுக்கு பெரிய வெங்கிட சுப்பய்யனாகிய றாசதானிய்யன் ஈட்டுமேல் கடன் பத்திரம் எழுதிக் குடுத்தேன். பெரிய வெங்கிட சுப்பய்னாகிய றாசதானிய்யன் சம்மதி.

சாட்சியள்: [இடையாற்று] மங்கலம் னாணுவய்யன் அரிவேன். பம்புறம்சுத்தி சுப்பய்யன் அறிவேன். யிந்த பத்திரம் எழுதினது நெருஞ்சிலகுடி கிறாம கணக்கு வெங்கு வயன் எழுத்து.

1851 வருஷத்திய நம்பர் 149

லாலுகெடி தாலுகா ஆங்கறையிலிருக்கு கோதண்டறாமய்யன் குமாறன் பெரிய வெங்கிட சுப்பய்யனாகிய றாஜ தானிய்யனுக்கு நஞ்சை புஞ்சை நிலத்தின் பேரில் ரூ 500 க்கு ஈட்டு கடன் பத்திரத்துக்கு மேற்படியார் மனுஷன் மேற்படி தாலுகா பம்பறஞ்சுத்தி யிலிருக்கும் கோபால கிஷ்ணய்யன் குமாரன் சுப்பய்யன் வசம் ஒரு ரூபாயி ஓலை விர்க்கலாச்சுது. 1851 வருஷம் சூலை மாதம் 23 தேதி. வீராசாமி முதலி, ஷ்டாம்பு தாறொகர்.

28. ஈட்டுமேல் கடன் பத்திரம்

(1851 ஆகஸ்டு 12)

(எட்டணா ஓலை)

நெரிஞ்சிலகுடி மூலபத்திறம்.

விறோதி கிருது வருஷம் ஆடி மாதம் 29 தேதி அகங்கரையிலிறுக்கும் ரெங்கசாமி அய்யன் புத்திரன் சேழய்யனுக்கு மேற்படி ஊரிலிறுக்கும் கோதண்ட றாமய்யன் புத்திரன் பெரிய வெங்கிட சுப்பய்யனாகிய றாசதானிய்யன் ஈட்டு மேல் கடன் பத்திரம் எழுதி குடுத்தபடி யென்னமின்றால் நெரிஞ்சிலகுடி கிறாமம் கெணசங்கை பாகம் பங்கு 64வில் யென் சொந்தமான பங்கு 17ல் தம்மிடத்தில் ஈடாக வெச்சது பங்கு 1. இந்த ஒறு பங்கும் அதை சேந்த நஞ்சை புஞ்சை வகையறா நிலங்களும் ஈடாக வச்சு யிதின் பெரில் கடனாக வாங்கினது கும்பினி ரூ 250. யிந்த யெறுனூத்தி அன்பது ரூபாயும் நான் றொக்கம் பத்தி கொண்டபடியினாலெ மேற்படி றுபாயிக்கு வட்டி இம்மாசம் மொதல் மாதம் ஒன்னுக்கு னூத்துக்கு முக்கால் றுபாயி வீதம் வட்டி கூட்டி கூடிய வட்டியும் மொதலும் உடையான் வேண்டும் போதே செலுத்திவிச்சு யிந்த பத்திரத்தை வாங்கி கொள்வேனாகவும், இந்தப்படிக்கு சம்மதிச்சு சேழய்யனுக்கு பெரியவெங்கிட சுப்பய்யனாகிய 'றாசதானிய்யன் ஈட்டுமேல் கடன்பத்திரம் எழுதிகுடுத்தேன், பெரிய வெங்கிட சுப்பய்யனாகிய றாசதானியப்பன் சம்மதி. சாட்சியள்: இடையாத்தமங்கலம் [னாறு] வய்யன் அறிவேன். பம்பறம்சுத்தி சுப்பய்யன் அறிவேன். யிந்த பத்திரம் எழுதினது நெரிஞ்சிலகுடி கிறாம கணக்கு வெங்குவயன் எழுத்து.

1851 வருஷத்திய நம்பர் 312

லாலுகெடி தாலுகா ஆகங்கரையிலிருக்கு கோதண்டறாமய்யன் குமாரன் பெரிய வெங்கிடசுப்பய்யனாகிய றாஜதானி அய்யனுக்கு நஞ்சை புஞ்சை நிலத்தின் பேரில் ரூ 250க்கு ஈட்டுக் கடன் பத்திரத்துக்கு மேற்படியார் மனுஷன் மேற்படி தாலுகா பம்பறம்சுத்தியிலிருக்கு கோபால கிஷ்ணய்யன் குமாறன் சுப்பய்யன் வசம் அரை ரூபாயி ஓலை விற்கலாச்சுது.

29. ஈட்டுமேல் கடன் பத்திரம்

(1851 செப்டம்பர் 24)

விறோதிகிருது வருஷம் புரட்டாசி மாதம் 10 தேதி திறுவாதி தாலுகா திறுக்காட்டுபள்ளியிலிருக்கும் தாஸாசாரியார் குமாரர் நரசிம்மாசாரியாறுக்கு அகங்கரை யிலிருக்கும் கோதண்டறாமய்யர் குமாரன் பெரிய வெங்கிட சுப்பய்யனாகிய றாசதானிய்யன் ஈட்டு மேல் கடன் பதிரம் எழுதி குடுத்தபடி யென்னமின்றால் நெரிஞ்சில கிறாமத்தில் குடி தெறுவில் சூரிய வாஸ்து தென் சரகில் அப்பாசாமிய்யன் கெட்டிமச்சு மனைக்கு மேர்க்கு கோதண்ட றாமய்யனாகியு ஆனைய்யன் இடத்தில் தாம் ஈடு வாங்கி இருகிர மனைக்கு கெழக்கு வாக்காலுக்கு வடக்கு தெரு வீதிக்கு தெற்க்கு இன்னாங் கெல்லைக்கு உள்ப்பட்ட மேல்படி மனை கீழ் மேல் அடி . . . யிதுவும் மேற்படி தென்சரகில் கோதண்டறாமய்யனாகிய ஆனைய்யன் [இடத்தில்] தாம் ஈடு வாங்கி யிருக்கிர மனை [பூ மாதம்] குடியிறுப்புக்குகெழக்கு தென் வடலான சந்துக்கு மேர்க்கு வாக்காலுக்கு வடக்கு தெறு வீதிக்கு தெர்க்கு இன்னாங் கெல்லைக்கு உள்ப்பட்ட மனை கம்பினி கவான் குடியிறுப்பு கீழ்மேல் அடி . . . யிதுவும் வடசரகில் அப்பாசாமிய்யன் மனை தென்னந் தோப்புக்கு மேர்க்கு யேகாம்பரம் பிள்ளை ஓலகம்ம பிள்ளை மனை தென்னம் பிள்ளை தோட்டத்துக்கு கெழக்கு தெறுவீதிக்கு வடக்கு மண்டயான் நஞ்சை வயலுகரு தெற்க்கு யின்னாங் கெல்லைக்கு உள்ப்பட்ட மனை கிழமேல் அடி . . . ஆக தென்சரகு வடசரகு மனை 3க்கு கீழ் மேல் அடி . . . யிந்த மூன்று மனைகளையும் தம்மிடத்தில் ஈடாக வச்சு இதின்பேரில் வாங்கினது கும்பினி அறுப்பு ரூ 60 இந்த அறுவது ரூபாயும் நாளது தேதியில் தம்மிடத்தில் னாம் றொக்கம் பத்தி கொண்டபடிஇனாலெ மேற்படி றுபாய்க்கி வட்டி இம்மாசம் நாளது தேதி முதல் மாசம் ஒன்றுக்கு னூத்துக்கு ஒறுரூபாய் [வீதம்] வட்டி கூட்டி கூட்டிய வட்டியும் மொதல் றுபாயும் உடையான் வேண்டும் போதே றொக்கத்தில் செலுத்தி விச்சு இந்த ஈட்டு பத்திரத்தை வாங்கி கொள்வனோகவும் இந்தபடிக்கு சம்மதிச்சு தாஸாசாரியார் குமாரன் நரசிம்மாசாரியாறுக்கு கோதண்ட றாமய்யர் குமாரன் பெரிய வெங்கிட சுப்பய்யனாகிய றாசதானிய்யன் ஈட்டும் பேரில் கடன்பத்திரம் எழுதிக் குடுத்தேன் பெரிய வெங்கிட சுப்பய்யனாகிய றாசதானிய்யன் சம்மதி.

சாட்சி, அய்யாபிள்ளை அறிவேன். வயித்திலிங்க முடயர் அறிவேன். அகங்கரை

அமுறுதம்மய்யன் குமாரன் சிவராமய்யனாகிய அப்பாவய்யன்றிவேன். அப்பாசாமிய்யன் குமாரன் வெங்கடறமணய்யன் அறிவேன். யிந்த பத்திரம் எழுதினது கிறாம கணக்கு ரெங்கு வய்யன் எழுத்து.

யிந்த [பாத்திற்க்கு] அய்யாபிள்ளை யெடத்தில் செல்லு ரூ 70 1/2, அனந்த வருஷம் தயி மாதம் 7.
உ ஸ்ரீ ராமஸ்மந்திரம்?

விறோதி கிறுது வருஷம் புறட்டாசி மாதம் 10 தேதி முதல் ரூ 60க்கு ஆனந்த வருஷம் தயி மாசம் 5 தேதிக்கு மாதம் 40 னாள் 25க்குறாசி ரூ 2450க்கு வட்டி ரூ 24 1/2 அசல் வட்டி உள்பட ரூ 84 1/2க்கு வட்டி [செலு] ரூ14 பாக்கி ரூ 70 1/2.

30. நிலம் சுத்தக் கிரய சாசனம்

(1852 ஏப்ரல் 30)

ஸ்ரீராம ஜெயம். பரிதாபி வருஷம் சித்திரை மாதம் 20 தேதி கொண்டையம் பேட்டையில் இறுக்கும் பாபு றாயர் பேறன் றாமசந்திற றாயற்கு ஆங்கரையில் இறுக்கும் கோதண்ட றாமய்யன் புத்திரன் யெக்கறாமய்யன் நஞ்சை புஞ்சை பிறம் போக்கு நிலம் சுத்திரய சாசனம் பண்ணிக்குடுத்தது: மாந்துரை கி[றாமத்தில்] யென் சொந்தமான நஞ்சை புஞ்சை தோப்புதுறவும் திட்டுதிடல் மாவடை மறவடை யெப்பேர்பட்ட சகல சமுதாயங்களும் நாளதுதேதியில் தமக்கு சுத்திரய சாசனம் பண்ணிகுடுத்தற்கு நிலபுரிய சீட்டு.

நஞ்சை சங்கற தேவன் காணி 7
வன்னாற செய் காணி 7 குழி 75...
அரட்டான் காணி 6 குழி 25
அக்கறானூர் காணி 4 குழி 35...
அக்கறானூர் கொல்லை காணி 1 குழி 50
மலட்டாம்ப் பள்ளம்]செய் காணி 1 குழி 29...
ஆக . . . காணி 28 குழி 12 ...
புஞ்சை தோட்டம் காணி 4 குழி 45 1/2...
தோப்பு குழி 71...

ஆக தோட்டம் தோப்பு காணி 5 குழி 17 1/2
ஆக நஞ்சை புஞ்சை காணி 33 குழி 30...

யிதுவும் மத்த பிறம்போக்கு பிறம்மவாஸ்து நத்தம் அடிசேரி பறச்சேரி திட்டுதிடல் யெப்பேற்பட்ட சகல சமுதாயம்ங்களுக்கும் நிலபுரியல் சீட்டு எழுதி குடுத்தோம் யெக்க றாமய்யன் சம்மதி.

சாட்சியள் : அய்யாவய்யன் அறிவேன். அகங்கரை முத்துறாமய்யன் குமாறன் றாமய்யன் அறிவேன்: மாந்துரையிலெ யிறுக்கும் சிவறாமய்யனாகிய அய்யாவய்யன் அறிவேன். யிந்த நஞ்சை புஞ்சை நிலம் விவரம் எழுதினது மாந்துரை கணக்கு றாமயன்.

---

*நஞ்சை, புஞ்சை, காணி, குழி ஆகியவை குறியீடுகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

31. பள்ளுப் பிரியல் சீட்டு

(1852 ஏப்ரல் 30)

ஸ்ரீ ராம ஜயம். பரிதாபி வருஷம் சித்திரை மாதம் 20 தேதி கொண்டயம்பேட்டையில் இறுக்கும் பாபுறாயர் பேறன் றாமசந்திர றாயறுக்கு ஆங்கரையில் இறுக்கும் கோதண்டறாமயன் புத்ரன் யெக்கறாமயன் பள்ளு சுத்த கிரய சாசனம் பண்ணி குடுத்ததர்க்கு பள்ளு புரியல் சீட்டு. மாந்துரை [வுள்ளன்] பனையடியான் பள்ளு 1, சன்னாசி பள்ளு1, மறுதயி பள்ளு 1, பஞ்சன் பள்ளு 1, அநந்தன் பள்ளு 1, ஆக பள்ளு 5. யிந்த பள்ளு அஞ்சும் அதை சேர்ந்த ஆண் அடுமை பெண் அடுமை குடும்ப சகிதம் [நமக்கு] சுத்த கிரய சாசனம் பண்ணி குடுத்தபடிய னாலெ மேற்படி பள்ளுக்கு புரியல் சீட்டு எழுதிகுடுத்தோம், யெக்கறாமய்யன் குமாறன் றாமயன் அறிவேன். மாந்துரையில்யிறுக்கும் சிவறாமய்யனாகிய அய்யாவய்ய னறிவேன். யிந்த பள்ளு புரியல் எழுதுனது மாந்துரை கணக்கு றாமயன்.

32. இசாறா முச்சிலிக்கா

(1852 மே 21)

1852 வருஷம் மேன் மாதம் 21 தேதிக்கு சரியான பரிதாபி வருஷம் வைய்யாசி மாதம் 10 தேதி திருச்சினாப்பள்ளியிவிருக்கும் றகுனாதபுரம் பாப்புறாயர் பேரனாகிய றாமசந்திரறாயர் அவர்களுக்கு சேவுர் மாகாணத்தைச் சேந்த றகுனாதபுரம் பேட்டையிலிருக்கும் வெங்கிடாசலகவுண்டர் குமாரன் பெருமா கவுண்டர்* எழுதிக் குடுத்த முச்சிலிக்கா யென்னமென்றால் மகாறாஜ றாஜஸ்ரீ றகுனாத சாயபு துரையவர்கள் அரமனை பிழக்கடை தோட்டத்துக்கு கிழக்கு பேட்டை வீதிக்கும் குளத்துக்கும் தெற்க்கு வாய்க்காலுக்கு வடபுறம் கோவிந்த தோட்டத்துக்கும் வாய்க்காலுக்கு தென்புறம் றாமாசாரி கொல்லைக்கும் மேற்கு [குழிக்கு] மேற்கு அக்குறாற வீதிக்கு வடக்கு யிது மத்தியில் யிருக்கப்பட்ட தங்கள் வீட்டில் தெருவி தென்ன மறம் 2 தோட்டத்தி தென்னமறம் 5 ஆக தென்னமறம் 7புளியமறம் 17 மாமறம் 9 வேப்பமறம் 1 விளாமறம்1 நெல்லிமறம் 1 வில்வமறம் 1 ஆக வுருவு மறம் 37க்கு வருஷத்துக்கு ரூபா 8 1/4 விழுக்காடு நாளது பரிதாபி வருஷம் முதல் துன்முகி வருஷம் வைய்யாசி மாதம் 10 தேதிக்கு வருஷம் 10க்கு ரூபா 82 1/2க்கு னான் உங்களிடத்தில் குத்தகைக்கி ஒப்புக்கொண்டு யிருக்குற படியால் அந்தந்த வருஷத்திய பணம் அந்தந்த வருஷம் ஆகீருக்குள்ளாக உங்களுடைய மேற்படி அரிய பாடி ஆரிமுத்துகவுண்டர் வசம் செலித்தி வைச்சு ரசிது வாங்கிக் கொள்ளுவேனாகவும், னாந் செலுத்தின பணத்துக்கு றசீது யில்லாவிட்டால் நீங்கள் ஒப்புக் கொள்ளுவதில்லை. யெந்த வருஷத்திலாவது செல்லாகாமல் பாக்கிநின்னால் அந்த வருஷத்தில் தானே யிசாறா குத்தகையெடுப்பட்டுப் போகும். மேற்படி மரங்களில் பச்சை கிளைகளை னான் வெட்டாமலும் பட்டுப்போனதற்கு உங்களிட வுத்திரவின்பேரில் மேற்படி மரத்தை கிறையத்துக்கு வெட்டிக் கொள்ளுகுறேன். யிந்தபடி என் றாசியில் எழுதிக் கொடுத்த யிசாறா முச்சிலிக்கா. யிந்த கீறல் பெருமா கவுண்டர் கைனாட்டு. யிதுக்கு சாக்ஷி எழுதின நன்மைக்கு மேற்படியூர் வாத்தியார் முருகப்பிள்ளை அறுவனே. சாக்ஷி, சேவுற் கணக்கு அன்னாபிள்ளை அறுவேன்.

---

* கவுண்டர் என்ற சொல் சுருக்கி 'கவுர்' என்று கொடுக்கப்பட்டுள்ளது.

33. நிலம் போக்கியச் சீட்டு

(1852 ஜூலை 11)

1852 வருஷம் சூலை மாதம் 11 தேதிக்கு தமுழ் பரீதாபி வருஷம் ஆனி மாதம் 30 தேதி அகங்கரையிலிறுக்கும் கோதண்டறாமய்யர் புத்திரன் பெறிய வெங்கிடசுப்பய்யனாகிய றாசதானிய்யன் தத்தனூரிலிருக்கும் அய்யகுட்டி னாடான் மகன் வீரபத்திற னாடான் உள்ளுத்தாறுக்கு நஞ்சை னெலம் போகிய சீட்டு யெழுதி குடுத்தபடி யென்னமின்றால் நெறிஞ்சில்குடி கிறாமத்தில் நம்முடைய சொந்தமான நஞ்சைநிலம் புதுப்படுகை கட்டளை அப்புபிள்ளை நிலத்துக்கு கெழக்கு கோதண்டறாமய்யன் நிலத்துக்கு புஷ்ப்பவன சாதிரியள் நிலத்துக்கு மேற்க்கு பம்பறம்சுத்தி [யெல்லை]க்கு வடக்கு பழய [சாலைகிம்] புஃஸைதிடலுக்கும் தெர்க்கு யின்னாங் கெல்லையில் மலட்டாத்துக்கு தென்புறம் வடபுறம் உள்பட செய் 3 யிதின் மேற்க்கு ரெஸ்தா றோட்டுசாலைக்கி வடக்கு புதுப்படுகை கண்ணிக்கு மேற்ககு சன்னாசி னாடான் போக்கியம் நிலத்துக்கு கெழக்கு கெணபதிவாக்கால் கரைக்கி தெர்க்கும் செட்டிதோப்பு அசுகாட்டுகுமுழிகட்டளை செய் . . . ஆக ஸ்தலம் 2க்கு செய் 3 . . . யிந்த னெலத்தை உன்னிடத்தில் போக்கியமாக வச்சு யிதின் பேரில் வாங்கினது புது ரூ 830க்கு பத்து பறாபவ வருஷம் சித்திரை 23 தேதியில் மேற்படி கிறாமத்தில் ஒறுபங்கும் பேரில் ஈடு எழுதி குடுத்து வாங்கினது அச்சுப்பத்திரம் 1க்கு ரூ245, மேற்படிவருஷம் மேற்படிநாளது தேதியில் மேற்படி கிறாமத்தில் அரைபங்கும் பேரில் ஈடுஎழுதி குடுத்து வாங்கினது அச்சடித்த பத்திரம் 1க்கு ரூ 105, ஆக பத்திரம் 2க்கு ரூ 350. யிதுவும் உன்தகப்பன் அய்யகுட்டி னாடான் பேறில் சவும்மிய வருஷம் ஆனிமாதம் 8 தேதியில் பம்பறம்சுத்தி கிறாமத்தில் குடியானச்சுகட்டுகட்டளையில் நம்முடைய சொந்தமான செய் 3ம் பேரில் ஈடு எழுதி குடுத்துவாங்கினது அச்சடி பத்திரம் 1க்கு ரூ 300. மேற்படி உன் தகப்பன் பேறில் சாதாரண வருஷம் ஆடிமாதம் 8 தேதியில் எழுதி குடுத்து வாங்கின வெண்ணல் பத்திரம் 1க்கு ரூ 50. ஆக பத்திரம் 4க்கு ரூ 700. நாளது தேதியில் றொக்கம் ரூ 130 ஆக ரூ 830 யிந்த யெண்ணூத்தி முப்பது மேல்கண்ட விவரப்படி னாம் றொக்கம் பத்தி கொண்டபடியினாலெ மேற்படி றூபாய்க்கி வட்டிக்கு ஈடாக மேலெழுதிய நிலங்களை நீயெ சாகுபடி செய்து வேண்டும் பயிரிட்டு அனுபவிச்சு கொண்டு மேற்படி நிலத்துக்கு சருக்காருக்கு யிசாறா பணம் வரி யெரை ஆள் அமிஞ்சி யெப்பெற்பட்டதும் நீயெ குடுத்து கொண்டு வறுவானாகவும் நாம் யெந்த வருஷம் சித்திரை காலாவதியில் மேல்எழுதிய அசல் துகை ரூ 830ம் குடுக்குறோமோ அந்த வருஷம் காலாவதியில்

மொதலுக்கு மொதலாய் பணம் வாங்கி கொண்டு சறுக்கார் நிலுவை சுத்திகரிச்சு மேற்படி நிலங்களையும் யிந்த பத்திரமும் சீட்டுல் கண்ட நாலுபத்திரம் உள்பட ஆக அஞ்சு பத்திரத்தையும் குடுத்து விடுவானாகவும் யிந்தப்படிக்கி சம்மதிச்சு பெரிய வெங்கிடசுப்பய்யனாகிய ராசதானியன் வீரபத்திர னாடான் உளுத்தாறுக்கு நஞ்சை நிலம் போக்கிய சீட்டு எழுதி குடுத்தோம், பெரிய வெங்கிடசுப்பய்யனாகிய றாசதனிய்யன் சம்மதி. சாட்சிகள்: வாளாடி அன்னதானமய்யன் அறிவேன். செம்பழனி அண்ணா [சபபதி] னாடான் அறிவேன். குரு னாதமளறாயன் அறிவேன். யிந்தபத்திரம் எழுதினது கிறாம கணக்கு வெங்குவயன் எழுத்து.

யிந்த போக்கியபத்தின் அசல் ரூ 830ம் 55ம் வருஷம் ஜனவரி மாதம் 2 தேதி செல்லு ஆனபடியினாலெ தங்களிடத்தில் வாபிசு குடுக்கலாயிட்டுது சாக்ஷிகள் [வயிந்திர] அய்யகுட்டி சம்மதி நாகனாதய்யன் அரிவன்.

யிதை 55ம் வருஷம் ஜனவரி மாதம் 20 தேதி மேற்படிமனுதாரிடத்தில் திருப்பிகுடுத்து] விடப்பட்டுது. 1850ம் வருஷத்திய நம்பர் 27.

லாலுகெடி தாலூகா ஆங்கரையிலிருக்கும் கோதண்ட றாமய்யன் குமாரர் பெரிய வெங்கிடசுப்பய்யறாகிய றாஜதானிய்யருக்கு மேற்படி தாலூகா நெரிஞ்சிலக்குடி கிறாமத்திலிருக்குற நஞ்சை நிலத்தின் பேரில் ரூ 850 1/2 போக்கியப் பத்திரத்துக்கு மேற்படியார் மனுஷன் மேற்படி தாலுகா பம்பரஞ்சுத்தியிலிருக்கும் கோபாலகிஷ்ணய்யர் குமாரன் சுப்பய்யர் வசம்இரண்டுரூபாய் ஓலை விற்க்கலாச்சுது. 1852 வருஷம் சூன் மாதம் 22.தேதி வீராசாமிமுதலி, ஷ்டாம்பு தாறொகர்.

34. நிலம் சுத்தக் கிரைய சாசனம்

(1852 ஆகஸ்டு 29)

1852 வருஷம் ஆகொக்ஷ்ட்டு மாதம் 29 தேதிக்குத் தமுள் பரிதாபி வருஷம் ஆவணி மாதம் 16 தேதி ஆங்கரையில் இறுக்கும் கோதண்ட றாமய்யன் புத்தரன் யெக்கறாமய்யன் நெரிஞ்சிலகுடியில் இறுக்கும் சுப்பாபிள்ளை குமாரன் தவம்பிள்ளையாகிய அய்யாபிள்ளைகி நஞ்சை நிலம் சுத்தகிரய சாசனம் பண்ணிக்குடுத்தபடி யென்ன மென்றால் [இதிநாளது நாள்] நம்முடைய அவசர நிமித்தமாக மாந்துரை கிறாம கெணசங்கா பாகம் பங்கு 36ல் எனக்குச் சொந்தமான

பங்கு 18 . . . யிந்த பதி நெட்டு பங்கை சேர்ந்த நஞ்சை நிலத்தில் ஒன் யிடத்தில் நாளது தேதியில் சுத்தகிரய சாசனம் பண்ணி குடுத்தது அய்யாதுரையன் நஞ்சை அக[றானூர்] கொல்லை கட்டளைக்கு மேறுக்குநெரிஞ்சலகுடி யெல்லைக்கு வடக்கு மேற்படி கிறாம பறயன் இரையிலிக்குகிளக்கு வடபுறம் அரட்டான் பள்ளம் கட்டளைக்கு தெறுகு இனாங்கல்லைக்கு உள்பட்ட நஞ்சை அக்கறானூர் கொல்லை கட்டளைசெய் 1க்கு காணி 1 குழி 50 யிந்த நிலத்தை சுத்தகிரய சாசனம் பண்ணிக் குடுத்து உபயானு சம்மதமாக நிச்சியத்த கிரையம் ரூ 60 யிந்த அறவதுறூபாயும் நாம் நம்முடைய பேருவளி 61ம்பசலி வாயிதாவுக்குநாம் பத்திகொண்டபடியனாலெ மேற்படி நிலத்தை தான்ஆசந்தறாக்க ஸ்தாயியாக புத்தற பவுத்தர பாறம்பரியமாக தானாதிவிநிமய விக்கறயங்களுக்கு யோக்கியமாக ஆசந்தறாக்க ஸ்தாயியாக ஆண்டு அனுபவிச்சு கொள்ளுவானகவும் இதுவே சுத்த கிரய சாசனமாயும் திறுவியபத்து சீட்டாயும் கட்டிகொள்ளுவனாகவும் இந்தப்படிக்கு சம்மதிச்சு தவம்பிள்ளை யாகிய அய்யாப்பிள்ளைக்கு யெக்கறாமய்யன் நஞ்சை நிலம் சுத்த கிரய சாசனம் பண்ணிக் குடுத்தோம். யெக்கறாமய்யன் சம்மதி. இந்த சரசனம் எழுதினது கணக்கு றாமயன் அறிவேன். அமுறுதமய்யன் குமாறன் சிவறாய்யனாகிய அப்பாவய்யனறிவேன்.

35. வாயிதாப் பணம் செலுத்தல் விபரம்

(1853 ஏப்ரல் 24)

ஸ்ரீ ராம ஜயம் உ பறமாதிச வருஷம் சித்திரை மாதம் 14தேதிக்கு மாந்துரை றாமசந்திற றாயர் பேருவளி 63ம் பசலி [வாயி] தா பணம் செலுத்திவிச்சதுக்கு விபறம்: காதிகை மாதம் 7 தேதி குறுவை நெல்லு வித்து முதல் பணம் வரவு ரூ 16 1/16 ப. 6.

மலட்டாறும்பள்ளம் நெல்லு வித்து முதல் பணம் ரூ 7 3/4 ப. 10.

கொண்டயம் பேட்டையில் றாமசந்திற றாயர் வகை ரெங்கபிள்ளை மேற்படியில் ரூ19ஆக ரூ 42 3/4 1/8 ப. 4.

முன்னாலெ றாமசந்திறறாயர் அவர்கள் யிடத்தில் எழுதி குடுத்த கச்சாத்து படி ரூ 35. மேற்படி யர் பணை அய்யாபிள்ளையிடத்தில் எழுதி குடுத்தபடி ரூ .7 7/8

ப.4 ஆக ரூ 42 3/4 1/8 ப.4

மார்களி மாதம் 13 தேதி கொண்டயம் பேட்டை றாமசந்திற்றாயர் அவர்கள் அனுபவிச்சது ஓலை படிக்கு ரூ 30.

தயி மாதம் 11 தேதி பச்சயாம்பேட்டை யெக்கமய்யா வரவு ரூ 25.

தென்னதோப்பு பத்தி யெளயான் வரவு ரூ4 1/2.

நதிப்படுகை புஞ்சை பத்திக்கு பள்ள சன்னாசி வரவு ரூ2 ப. 9.

[றொ]க்காத்து முதல் நெல் 3 கலம் கலத்து ரூ 1 1/16. ஆக ரூ 3 1/4 3/16 ப. 3.

ஆக தயி மாதம் இறுசால் ரூ 35.

தயி மாதம் 15 தேதி மறுபடி பச்சயாம் பேட்டை யெக்கமயாவரவு அய்யாபிள்ளை மூலம் ரூ 10.

மாசி மாதம் 14தேதி கொண்டயம் பேட்டை றாமசந்திற றாயர் வரவு ரூ 19 1/4. நதிப்படுகை தோப்பு வரவு ரூ 2. கார் நெல்லு வித்து முதல் பணம் ரூ 4. ஆகமாசி மாதம் ரூ 25 1/4.

பங்குனி மாதம் இறுசாலுக்கு 16 தேதி கொண்டயம் பேட்டை ஜகன்னாதறாயர்* வரவு ரூ 25.

ஆக மாதம் 5க்கு செல்லு ரூ 168 1/8 ப. 4க்கு கொண்டயம்பேட்டை வரவு பச்சயாம் பேட்டை [யெக்கம]ய்யர் உள்பட ரூ 128 1/4. சங்ற தேவன் தோப்பு ரூ 4 1/2. நதிப்படுகை தோப்பு ரூ 2. நதிப்படுகை முதல் பத்தியில் ரூ 2 ப. 1. கார் நெல்லு வித்து முதல் ரூ 31 1/4 1/16 ப. 7.ஆக ரூ 168 1/8 ப. 4.

36. பேரிசு விபரம்

(1853 மே 12)

ஸ்ரீ ராம ஜயம். பிறமாதிச வருஷம் வய்யாசி மாதம் 1 தேதி மாந்துரை

யெக்கறாமய்யனிடத்தில் சாசனம் வாங்கி அனுபி விக்குற றாமசந்திரறாயர் 63ம் பசலி

பேரிசு ரூ 232 1/2 3/20 ப. 2. னாட்டு கணக்கு ரூ 1 1/4 ப. 2. படி.. ரூ 1 1/2.

ஆக கூடுதல் ரூ. 235 3/20 ப. 4.க்கு செல்லு:

கார்த்திகை மாதம் 10 தேதி ரூ 21 3/4 ; 13 தேதி ரூ 3 1/4; 30 தேதி ரூ 17 3/4 1/8 ப. 4;

ஆக காத்திகை மாதம் 42 3/4 1/8 ப. 4.

மார்களி மாதம் 13 தேதி ரூ 30. தயி மாதம் 11 தேதி ரூ 35; 19 தேதி ரூ 10. மாசி மாதம் 14 தேதி ரூ 25 1/2. பங்குனி மாதம் 13 தேதி ரூ 25. சித்திரை மாதம் 13 தேதி ரூ 30.

ஆக ரூ 198' 1/8ப. 4லே ராசி ரூ 37லே.

வய்யாசி மாதம் 1 தேதி றாமசந்திறறாயர் மூலத்தில் ரூ 15, மறுபடி ரூ 9 1/2, ஆக ரூ24 1/2லே ராசி ரூ 12 1/2 1/16 லே ... ...

37. குத்தகைச்சீட்டுக்கு எதிர்நடைச்சீட்டு

(1853 ஜூலை 13)

பறமாதிச வருஷம் ஆனி மாதம் 31 தேதி மாந்துரை றாமசந்திற றாயர் அவர்களுக்கு நெரிஞ்சிலகுடியில் இறுக்கும் சானாறக்கவுண்டன் கறுப்பக் கவுண்டன் தெனம் தோப்புக்கு குத்தகை சீட்டுக்கு யெதிர்நடைசீட்டு யெழுதி குடுத்தபடி யென்நமென்றால் ஓங்கள் சொந்தமான நதிப் படுகை தோப்பை நான் குத்தகைக்கு ஒப்புகொண்டபடியனாலெ மேற்படி மறதில் கண்ட பலநெ அனுபவிச்சு கொண்டு வருஷம் 1க்கு ரூ 4 வீதம் வருஷம் 2க்கு ரூ8 ஆயிந யெட்டு றுபாயும் அந்தந்த வருஷத்துக்கு உள்ள பணம் காத்திகை மாதம் பாதியும் மாசி மாதம் பாதியுமாயி றொக்கம் செலுத்திவிப்பேனாகவும். இந்தப்படிக்கு சம்மதிச்சு அடயோலை சீட்டுக்கு யெதிர்நடைசீட்டு யெழுதி குடுத்தேன். யிந்த கீறல் கறுப்பக்கவுண்டன். சாட்சியள், லாலுகெடித் தாலுகா அபிஷகபுறம் சேஷயன் குமாறன் [ஆனையன்] அறிவன். யிந்த . . . சீட்டு எழுதினது கணக்கு றாமயன்

38. குத்தகைச்சீட்டுக்கு எதிர்நடைச்சீட்டு

(1853 ஜூலை 13)

ஸ்ரீ ராம ஜயமு, பறமாதிச வருஷம் ஆநி மாதம் 31 தேதி மாந்துரையில் இறுக்கும் றாமசந்திறறாயர் அவர்களுக்கு மேற்படியூர் பள்ள அடிச்சேரியில் தாங்கள் மனையில் குடிஇறுக்குர தாங்கள் பள்ளு ஆநந்தன் நஞ்சை நிலம் கட்டு குத்தகை

சீட்டுக்கு யெதிர்நடை சீட்டு யெழுதி குடுத்தபடி யென்ன மென்றால் ஓங்கள் சொந்தமான அக்கறார் கட்டளை அக்கறானூர் கொலை கட்டளை செய் 3ம் நான் கட்டு குத்தகைக்கு ஒப்பு கொண்டபடியனாலெ மேற்படி நிலத்தை இறுபூ சாகுபடி அதில் கண்ட பலநெ அனுபிவிச்சு கொண்டு தங்களுக்கு குத்தகை குடுக்கரது ரொக்கம் ரூ 3ம் நெல்லு காரில் நெல் 25 கலம், . . . பாலமனிய நெல் 15 கலம் ஆக நெல் 40 கலம் நெல்லுக்கு ரொக்கமும் தங்குளுக்கு குடுப்பேனாகவும், தச்சன் கொல்லன் சுவந்தறம் நாநே குடுத்து கொண்டு வறுவேனாகவும், வக்கல் கட்டு [னால் 1க்கு] குடுப்பேனாகவு. சாகுபடிக்கு ஆக நானெ . . . கொண்ட . . . யெட்டு வாங்கிஇறுப்பதுனாலெ குத்தகையுடன் . . . அளந்த நெலும் அளப்பேனாகவும் இந்தப்படிக்கு சம்மதிச்சு அடயோலை சீட்டுக்கு யெதிர் நடை சீட்டு எழுதி குடுத்தேன். யிந்த கீரல் ஆநந்தன். சாட்சியள் லாலுகெடி தாலூகா அபிஷேகபுறம் சேஷயன் குமாறன் ஆனையன் அறிவனே. இந்த சீட்டு யெழுதினது கணக்கு ராமயன்.

39. குத்தகைச்சீட்டுக்கு எதிர் நடைச்சீட்டு

(1853 ஜூலை 13)

ஸ்ரீராம ஜயமு, பறமாதிச வருஷம் ஆநி மாதம் 31 தேதி மாந்துரையில் இறுக்கும் ராமசந்திற றாயர் அவர்களுக்கு மேற்படியூர் பள்ள அடிச்சேரியில் இறுக்கும் தாங்கள் மனையில் குடிஇறுக்குர தங்கள் பனை பள்ளன் குப்பான் மகன் சன்னாசி பஞ்சன் பணையடியான் மறுதை இவர்கள் நஞ்சை நில கட்டு குத்தகை சீட்டுக்கு யெதிர்நடை சீட்டு யெழுதி குடுத்தபடி யென்னமென்றால் ஓங்களுடைய சொந்தமான நஞ்செ செய் 19ம் நாங்கள் கட்டு குத்தகைக்கு ஒப்பு கொண்டபடியனாலெ மேற்படி நிலதில் இறுபூ சாகுபடி செயிதும் ஒறுபூ சாகுபடி செய்யப்பட்ட வயலெ ஒறுபூ சாகுபடிசெயிதும் அதில் கண்ட பலநெ அனுபிவிச்சு கொண்டு தங்களுக்கு குத்தகை அளக்குரது காரில் நெல் 300 கலம் . . . யில் பாலமணியன் கோடை காரில் நெல் 190 கலம் ஆக 490 கலம் நெல்லும் களத்துமோட்டில் அளப்பேனாகவும் கொல்லன் தச்சன் சுவந்தறம் நாநெ குடுத்து கொள்ளுவேனாகவும் வக்கல் கட்டு னாலத்தொறு வக்கல் குடுப்பேனாகவும் சாகுபடிக்கு ஆக வாங்கப்பட்ட கோடை . . . நெல் பதுபடி கூடிய நெல்லு குத்தகையுடன் சேத்துஅளப்பேனாகவும் இந்தப்படிக்கு சம்மதிச்சு அடயோலை சீட்டுக்கு யெதிர் நடை சீட்டு யெழுதிகுடுத்தேன். சாட்சி, லாலுகெடி தாலுகா அபிஷேகபுறம் சேஷய்யர் குமாறன் ஆனையன் அறிவேன். யிந்த கீரல் மறுதையி. யிந்த கீரல் பஞ்சன் . . . யிந்த கீரல் சன்னாசி. இந்த சீட்டு யெழுதினது கணக்கு ராமயன்.

40. அடையோலைச்சீட்டுக்கு எதிர் நடைச்சீட்டு

(1853 ஆகஸ்ட்டு 16)

பிறமாதீச வருஷம் ஆவணி மாதம் 2 தேதி மாந்துரையில் இறுக்கும் கொண்டயம் பேட்டை றாமசந்திறறாயர் அவர்களுக்கு நெரிஞ்சிலக்குடியில் இறுக்கும். ரெங்க [முத்திரியன்]* மகன் யெளயான் தென்னம் தோப்புக்கு அடயோலை சீட்டு எழுதிகுடுத்தபடி. யென்ன மென்றால் ஓங்கள் சொந்தமான சங்கற தேவன் தோப்பு முளுவதும் நான் [பத்தி]க்கு ஒப்புகொண்ட படிய னாலெ மேற்படி மறத்துக்கு பத்தி நாளது வருஷம் ஆவணி மாதம் 1 தேதி முதல் ஆடி மாதம் 30 தேதிக்கு பத்தி ரூ 8 1/2 யிதுவும் சினெ விழுந்த மறம் 12க்கு தள்ளுபடி மறம்..மறம் 10க்கு ரூ 1 1/4 ஆக ரூ 9 3/4 றுபாயும் தங்கள் பேருக்கு வரி வாயிதாவுக்கு மேற்படி வருஷம் ஆவணி மாதம் 30 தேதிக்கு செலுத்திவிச்சு ரசீது பெத்து கொண்டு ஆவணி மாதம் 1 தேதியில் ஊறி பெறுத்த காயெ புடிங்கி கொண்டு தோப்பை விட்டுவிடுவானாகவும் இந்த படிக்கு அடயோலைசீட்டுக்கு எதிர்நடைசீட்டு எழுதி குடுத்தேன். யிந்த கீரல் யெளயான். சாட்சி [சிவறாம] சேடாவல்லபர் அருவேன். இந்த சீட்டு எழுதினது கணக்கு றாமயன்.

---

* இப்பெயர் குறியீட்டில் எழுதப்பட்டுள்ளது.

41. அடையோலைச்சீட்டுக்கு எதிர் நடைச் சீட்டு

(1853 ஆகஸ்ட்டு 16)

ஸ்ரீ ராம ஜயம். பிறமாதிச வருஷம் ஆவணி மாதம் 2 தேதி மாந்துரையில் இறுக்கும் றாம ச[ந்தி] றாயர் அவர்கள் பள்ளஅடசேரியில் இறுக்கும் சன்னாசி பஞ்சனுக்கு புஞ்சைநில அடயோலை சீட்டு (க்கு) யெதிர் ந[டை]சீட்டு எழிதிக் குடுத்தபடி யென்ன மென்றால்

ஒங்கள் சொந்தமான புஞ்சை நதிப்படுகைதர செய் 3ம் நான் [ரொ]க்க பத்திக்கு ஒப்பு கொண்ட படியனாலெ மேற்படி நிலத்துக்கு பத்தி ரூ7 1/2றுபாயும் கெடு மார்களி மாதம் ரூ 3 1/2, மாசி மாதம் ரூ 4 ஆக ரூ 7 1/2 தங்கள் பேருக்கு வரி வாயிதாவும் செலுத்திவிச்சு ரசீது பெத்து கொளுவானாகவும், இந்தபடி சம்மதிச்சு யெதிரிடை எழுதி குடுத்தேன். யிந்த கீரல் சன்னாசி. சாட்சி யிந்த கீரல் யெளயானறிவேன்.

42. கடன் முறி

(1853 ஆகஸ்ட்டு 16)

பறமாதிச வருஷம் ஆவணி மாதம் 2 தேதி ஆங்கரையில் இறுக்கும் முத்துறாமசாத்திரியளுக்கு மாந்துரையில் இறுக்கும் கொண்டயம் பேட்டை பாபுறாயர் பேறன் றாமசந்திரறாயர் யெழுதி குடுத்த கடன்முரி யென்னமென்றால்

இதினை னாள் தம்முடத்தில் கடனாக வாங்கினது தமக்கு ஆங்கரையில் இறுக்கும் யெக்கறாமயன் மாந்துரை கிறாமத்தில் நஞ்சை வண்ணாற் செய் கட்டளையில் ஒறு செயி யீடு வச்சு அதின் பேரில் வாங்கின பணத்துக்கு ஆக மேற்படி யெக்கறாமயனிடத்தில் நாம் மேற்படி மாந்துரை கிறாமம் சாசனம் வாங்கினதுக்குஆக சாகுபடி விஜயத்தில் குடுக்க வேண்டிய பணத்துக்கு ஆக ஓமக்கு சாட்டி விட்டு நாம் ஒப்புக் கொண்டது ரூ 89 1/2 யிந்த யெம்பளத்தி ஒன்ம்பது அரை றுபாயிக்கி நான் பாதியப்பட்டபடியினாலெ மேற்படி பணத்துக்கு நாளது தேதி முதல் மாதம் 1க்கு னூத்துக்கு ஒரு பணம் வீதம் வட்டிகூட்டி யேரினவட்டியும் முதலும் இதுநடுத்த புரட்டாசி மாதம் 1 தேதி குள்ளாக குடுப்பேனாகவும் இந்தபடிக்கு சம்மதிச்சு முத்துறாம சாத்தியளுக்கு ராமசந்திரராயர் கடன்முரி யெழுதி குடுத்தேன் [ராமசந்திரராயர்] ஓம். இந்த சீட்டு யெழுதினது மாந்துரெயிலெ யிறுக்கு அமுறுதமய்யன் குமாறன் சிவறாமய்யனாகிய அப்பாவய்யனறிவேன். பிரமாதிஷ வருஷம்ஆவணி மாதம் 29 தேதியிலெ யிந்தா பத்தரன் தொகெ வட்டி உள்ப்பட்ட ரூ 90 1/4 1/16 நான் பத்தி கொண்டேன்.

43. இசாறாப்பட்டயம்

(1854 ஏப்ரல் 17)

J BIRD Collr.

1854 வருஷம் யேப்பரெல் மாதம் 17 தேதி திருச்சினாப்பள்ளி சுபா வகையறா கலெகட்டறாகிய மகாராரா மேஸ்தார் சான் பறட்டு துரை யவர்கள் லாலுகெடி தாலுகா சுபா மாகாணம் நம்பர் 27 மாந்துரை யெக்க றாமயனுக்கு குடுத்த இசாறா பட்டயம் யென்னமென்றால் மேற்படி கிறாமத்தில்

1263ம் பசலி . . . நீ சாகுபடி செயிது அனுபவிக்கப்பட்ட நிலத்துக்கு தரதில் பிறகாரம் யேர்ப்பாடா இறுக்குர நிலத் தீர்வையும் இது நடியில் விபறம் கண்டு இறுக்குரது: வருஷத்துக்கு பேரிசு ரூ 588 ப. 1க்கு சுத்தகிரயசாசனம் [போகத்து] ஜவந்தினாத புறம் கோபாலய்யனுக்கு நஞ்சை புஞ்சை காணி 104 . . . க்கு ரூ 349 1/2 ப. 11லே ராசிபேரிசு ரூ 238 1/2 . . . வருஷத்து[கலைசல்] சாஸ்தி வாலு ரூ 8 1/2 யிறுபு பயிர்சாஸ்தி ரூ . . . ஆ . . . சாஸ்தி ரூ 17 1/2 ப. 10 ஆரூ 256 . . . க்கு மேற்படி தரிசு

ரூ18 1/2 . . . . யிறுபூ பயிர் . . . ஆக ரூ 18 . . . க்கு 237 1/2 . . . நஞ்சை சங்கற தேவன் இறுபூ . . . ரூ 125க்கு நெல் 66கலம் . . . .

யிந்த துகைக்கு நீ இசாறா ஒப்பு கொண்டு இறுக்கு . . . . ங்களில் வறுமானம் விலைவாசியடை உத்தபேதை திறும வரபட்ட நய நஷ்டங்களு . . . மின்னாற் செலுத்திவிச்சு ரசீது வாங்கி கட்டிகொள்ளவும்.

நவம்பர் மாதம் ரூ 23 3/4, ரிசம்பர் மாதம் 35 5/8, சனவரி மாதம் 35 3/8, பிப்றவரி மாதம் 35 3/8, மார்ச்சி மாதம் 35 3/8, யேப்பரெல் மாதம் 35 3/8, மேன் மாதம் 23 3/4, சூன் மாதம் 11 1/2 3/16ப. 8,,ஆக 237 1/4 1/20ப. 8 .. ...

44. இசாறாப் பட்டயம்

(1854 ஏப்ரல் 17)

J. BIRD Collr.

1854 வருஷம் யேப்ரல்மாதம் 17 தேதி திருச்சினாப்பள்ளி சுபா வகயறா கலெகட்டறாகிய மகாராராஸ்ரீ மேஸ்தர் சான் பறட்டு துறை அவர்கள் லாலுகெடி தாலூகா கீழமுறி மாகாணம் நம்பர் 157 முளப்பது குடி கிறாமத்து மிராசு குடி றாமானாத சாஸ்திரியளுக்கு குடுத்தபட்டயம் யென்னமெண்டால் நாளது 1263ம் பசலக்கி ஆடி முதல் ஆனி [முடிய] மேற்படி கிறாமத்தில் நீ சாகுபடி செயிது அனுபிவிக்கப்பட்ட நிலத்துக்கு தறத்துபிறகாறம் யேர்ப்பட்டுருக்குற தீர்வை யிதுநடியில் கண்டுருக்கறது. 1வது: வருஷத்துக்கு பேரீசு ரூ 3 1/4ப. 5 நாளது வருஷம் சாஸ்தி [புஞ்செ]10ம் பயிர் சாஸ்தி [புஞ்செ]10ம் பயிர்கம்மி [புஞ்செ]10ம் ஆ பேரிசு ரூ 3 1/4 ப. 5க்கு நஞ்சை அப்பத்தல் மோடு கட்டளை செவலத்தரம் ஒரு பூ குழி 75க்கு தீர்வை [ரூ2 ப. 8 1/8] ரூ 3 1/4 ப. 5 செவலத்தறம் ஒரு பூ குழி 75க்கு தீர்வை புஞ்செ குழி 10ம் ஆக ரூ 3 1/2 ப. 5.

